Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள்
இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்
INTERNET
மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு
'திருமுருகன் கொம் நெற்'
இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச.முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310
(ச-1771)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 14 (09.12.2003) செவ்வாய்க்கிழமை இதழ்:70

## அரசாங்கத்தின் பொறுப்பு என்னிடம் இருந்தும் பேச்சை முன்னெடுக்கும் அதிகாரம் இல்லை!

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

(குருநாகல்)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவந்த சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்தச் செல்வதற்கு அரசாங்கத்தின் தரப்பில் எவரும் இல்லையென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் குருநாகல் பிரதேசத்துக்கு விஜயம் செய்த பிரதமர், கிரியனப் பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது -

கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மூன்று முக்கிய அமைச்சுக்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்.

இதனால், சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தபோது அரசாங்கத்தின் முழுப்பொறுப்பும் என்னிடம் இருந்தமையால் பேச்சுக்களில் ஓர் ஸ்திரநிலைமை காணப்

(10 ஆம் பக்கம் பார்க்க)



### தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று தமிழ்ச்செல்வனை சந்திப்பர்!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையேயான சந்திப்பொன்று இன்று கிளிநொச்சியிலுள்ள விடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கனடாவுக்கு திரும்புவோருக்கு வதிவிட அட்டை அவசியம்!

(கொழும்பு)

கனடாவிலிருந்து இலங்கைக்கு வந்தவர்கள் மீண்டும் கனடா செல்வதாயின் அந்த நாட்டு நிரந்தர வதிவாளர் அடையாள அட்டையை சமர்ப்பிக்கவேண்டும் எனும் புதிய நடைமுறை இம்மாதம் 31 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரவுள்ளதாக கொழும்பிலுள்ள அந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகள் தோல்வி கண்டால் புலிகளை யுத்தத்தில் சந்திக்கவும் தயார்!




## இராணுவத் தளபதி பலகல்ல காஷ்மீரில் தெரிவிப்பு

(சிறிநகர்)

**விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தால் - புலிகளை யுத்தத்தில் எதிர்கொள்வதற்கு இராணுவத்தினர் தயாராகவுள்ளனர் என்று - இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்தார்.**

மூன்று நாள் விஜயமாக இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, நேற்று இந்தியா - பாகிஸ்தான் எல்லைப்புற மாநிலமான ஜம்மு-கஷ்மீரின் தலைநகர் சிறிநகருக்கு விஜயம் செய்திருந்தார். அங்கு செய்தியாளர் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள அதேவேளை, கடந்த 22 மாத காலத்தில் புலிகள் தமது போரிடும் ஆற்றலை வெகுவாக அதிகரித்திருக்கிறார்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



### ஊர்காவற்துறைக் கடலில் 11 இந்திய மீனவர் கைது!

(ஊர்காவற்றுறை)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 11 இந்திய மீனவர்களை கடற்படையினர் கைதுசெய்தனர்.

நேற்றுமுன்தினம் ஊர்காவற்துறை பகுதியில் மூன்று பகுதிகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களே கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலை மாணவன் குளத்தில் மூழ்கி மரணம்

(கொழும்புத்துறை)

குளத்தில் குளித்துக்கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவரொருவர், நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். கொழும்புத்துறை பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவனான குருநகரைச்சேர்ந்த சாள்ஸ் விமலேந்திரன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு நீதிமன்றில் திலங்க சுமதிபால சரண்!


(கொழும்பு)

சிறிலங்கா ரெலிக்கொம் மற்றும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவரான திலங்க சுமதிபாலா, நேற்று கொழும்பு மாவட்ட நீதவான் முன்னிலையில் சரணடைந்தார்.

கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளை பார்வையிடுவதற்காக பாதாளக் குழுத் தலைவர் ஒருவருக்கு, போலி ஆவணங்களைச் சமர்ப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலை செல்ல மகேஸ்வரனுக்கு அனுமதி மறுப்பு; எதிர்த்து பலாலி வீதியில் நேற்று மறியற் போராட்டம்!



(யாழ்ப்பாணம்)

பலாலி வீதியினூடான படையினரின் போக்குவரத்தை மறித்து அமைச்சர் மகேஸ்வரன் தலைமையில் நேற்று மறியற்போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் கீரிமலை நகுலேஸ்வரர் கோவிலுக்கு செல்ல முற்பட்ட அமைச்சரையும் அவரது குழுவினரையும் படையினர் வழிமறித்து திருப்பி அனுப்பியமையைக் கண்டித்தே இந்த மறியற்போராட்டம் இடம்பெற்றது.

அமைச்சர் மகேஸ்வரன் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கான மின்விநியோகத்தை ஆரம்பித்து வைப்பதற்காக நேற்றுமுன்தினம் சென்றுள்ளார். அதன்பின்னர் அங்கிருந்து கீரிமலை நகுலேஸ்வரர் கோவிலுக்கு செல்ல முற்பட்டபோது அதற்கு படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

பலாலி தலைமையகத்தில் இருந்து தமக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக கூறிய படையினர், அமைச்சரையும் அவரோடு சென்ற கூட்டத்தினரையும் கீரிமலைப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கவில்லை. ஆனால் தென்னிலங்கையில் இருந்து வந்திருந்த சுற்றுலாப் பயணிகள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

இதனால் ஆத்திரமுற்ற அமைச்சர் படையினரோடு வாக்குவாதப்பட்டுவிட்டு இறுதியாக ஏமாற்றத்தோடு திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எமது வீதிகளில் படையினரை நடமாட அனுமதிக்கமாட்டோம்!

### அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது தாயக நிலப்பரப்பிலே நாம் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை உள்ள போது எமது வீதிகளால் படையினரையும் நடமாட அனுமதிக்க மாட்டோம் என அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தர்.

நேற்று பலாலி வீதியினூடான படையினரின் போக்குவரத்தை தடைசெய்து நடைபெற்ற மறியற்போராட்டத்தின்போது செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

போர்நிறுத்தம் அமுலில் உள்ள காலப் பகுதியிலும் எமது மண்ணில் நாம் சுதந்திரமாக நடமாடமுடியாதுள்ளது. ஆனால் தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் நடமாட அனுமதி வழங்கப்படுகிறது. இதனை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

பாதுகாப்பு அமைச்சினை ஜனாதிபதி பறித்துக் கொண்ட பிற்பாடு அசம்பாவிதங்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கந்தர்மடத்தில் நேற்று நடைபெற்ற மறியற் போராட்டத்தின் சில காட்சிகள்...



## புன்னாலைக்கட்டுவன் வடக்கில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

மக்களை மீளக்குடியமர இராணுவம் அனுமதித்த புன்னாலைக்கட்டுவன் வடக்கு பிரதேசத்திலுள்ள சேதமடைந்த, சேதமடையாதுள்ள வீடுகளிலுள்ள கதவு, ஜன்னல் மற்றும் கூரைகள் அண்மைக்காலமாக அதிகளவில் திருடப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் மாலைநேரத்தில் செல்லும் திருட்டுக் கும்பல் - கதவு, ஜன்னல்களைக் கழற்றுவதுடன், இரவில் வாகனத்தில் ஏற்றிச்செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இப்பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள 600 மீற்றர் பகுதியில் உள்ளமையால், மக்களை மீளக்குடியமர இராணுவம் அனுமதி மறுத்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், கடந்தகாலங்களில் இங்குள்ள சில வீடுகளின் கதவு நிலைகள், ஜன்னல்கள் மற்றும் கூரைகள் கசிப்பு உற்பத்திக்காக சூறையாடப்பட்டு வந்ததும், பின் வீட்டு உரிமையாளர்கள் மற்றும் கிராமசேவகர்களின் ஒத்துழைப்புடன் தடுத்து நிறுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (83)

## இளைஞர் விபரம் திரட்டப்படுகின்றது

சமூக நலனோம்பல் அமைச்சினால், 2003 ஆம் ஆண்டுக்கான இளைஞர்கள் தொடர்பான கணக்கெடுப்பு - கரவெட்டி பிரதேச செயலகத்திலுள்ள இமையாணன், அத்தாய் உட்பட 3 கிராமசேவகர் பிரிவுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இத்துடன் 60 வயதுக்கு மேற்பட்டோரின் விபரங்களும் சேகரிக்கப்படடுக்கொண்டிருக்கிறது எனவும் தெரியவருகிறது. (116)

## விபத்தில் இளைஞன் படுகாயம்

ஆனைக்கோட்டைசந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் ஆனைக்கோட்டை, 3 ஆம் கட்டைச் சந்திக்கு அண்மையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும், துவிச்சக்கர வண்டியொன்றும் நேருக்குநேர் மோதியதிலேயே விபத்து நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

இந்தவிபத்தில் ஆலடி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கே.ஆறுமுகராசா (வயது 46) என்பவர் படுகாயமடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்தவர் சிறுகாயத்துடன் தப்பியுள்ளார் எனினும், மோட்டார் சைக்கிள் கடும் சேத்துக்கு உள்ளானது. படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருகின்றார்.

## அளவெட்டிப் பகுதியில் மிதிவெடி அபாய கருத்தரங்கு

இலங்கை ஜாதிக சர்வோதய சங்கத்தினால், கிராமங்கள்தோறும் நடாத்தப்படும் மிதிவெடி அபாயக் கல்வித்திட்டம் - எதிர்வரும் வியாழக் கிழமை அளவெட்டி ஞானவைரவர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - அப்பகுதி மக்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, சமூகமட்டத் தொடர்பாளர் வி.இளம்பிறைநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தக் கல்வித்திட்டம் யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அளவெட்டி வடக்குப் பகுதியில் விவசாய நிலங்கள், குடியிருப்புக்கள் என்பன உட்பட்ட நிலப்பகுதியில் ஏராளமான மிதிவெடிகள் யுத்தகாலத்தின்போது புதைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கப்படும்

(புன்னாலைக்கட்டுவன்)

வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திச்சங்க கொத்தணியின் கீழுள்ள, ஆறு பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் முன்பள்ளி மாணவர்களுக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் இலவச சீருடைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்குள்ள 46 முன்பள்ளிகளைச் சேர்ந்த 2050 மாணவர்களுக்கும், 103 ஆசிரியைகளுக்கும் இலவச சீருடைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், கடந்த ஐந்து வருடங்களாக முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச சத்துணவுத் திட்டத்தினை வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணி, நிறுவன இலாபத்தில் நடைமுறைப் படுத்திவருவதும், கடந்த 1999 ஆம், 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சங்கங்களின் முன்பள்ளியில் கல்விபயின்ற மாணவர்களுக்கு இலவச சீருடைகளை வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (83)

## பாடசாலை விட்டு விலகிய மாணவர்களுக்கு தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சி வகுப்பு!

(வடமராட்சி)

வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தினால் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கான தமிழ் சுருக்கெழுத்து, தட்டச்சு மற்றும் ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சு பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

அடுத்த வருடம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த தொழில்சார் பயிற்சிநெறிகள்- வாரத்தில் ஏழுநாட்களும் நடைபெறவுள்ளன. பயிற்சி நெறிகளை மேற்கொள்பவர்கள் அரச அலுவலகங்களில் 6 மாதகால செயன்முறைப் பயிற்சி பெறவும் ஒழுங்குசெய்யப்படும். பயிற்சி வகுப்பில் பங்குபற்ற விரும்புபவர்கள் வதிரியில் உள்ள வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்துடன் தொடர்புகொண்டு, புதன்கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கழகத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## வீடுகள் அமைக்க யு. என். எச். சி. ஆர் உதவி

(புன்னாலைக்கட்டுவன்)

திடற்புலம் பிரதேசத்தில் நிரந்தர வீடுகளற்ற, சொந்தமான காணியுடைய குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இங்கு - அண்மையில் வன்னியிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கும், மிகவும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கும் - 20 ற்கும் மேற்பட்ட நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன், சொந்தக் காணியுடையவர்களுக்கு மட்டுமே வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (83)

## மோட்டார் சைக்கிள் - பஸ் விபத்தில் இளைஞன் படுகாயம்

(வண்ணை)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றுக்காலை இடம்பெற்ற பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த ட.பிறின்ஸ் (வயது 31) என்பவரே காயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான வடபிராந்திய போக்குவரத்துசபை பஸ்ஸும், மோட்டார் சைக்கிளும் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன. (111)


**Yogi Home Science Academy**

வழங்கும்

பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 2 நாட்கள் மட்டும்

01. நான்கு கேக் கலவைகள் 13.12.2003
காலை 10 மணி முதல் 2 மணி வரை
1.Rich Cake
2.Dates Cake
3.Light fruit Cake
4.Marble Cake

02. ஐந்து Pudding வகைகள் 13.12.2003 3 P.m முதல் 5 P.m வரை
1.Caramal Pudding
2.Cake Pineapple Pudding
3.Ribbon Pudding
4.Biscuit Pudding
5.Chocolate Icecream

03. ஐந்து வகை Short Eats வகைகள் 14.12.2003 காலை 10.30 மணி முதல் 1 மணி வரை பின் 2 P.m - 4 P.m வரை
1.Pizza
2.Nippon Rolls
3.Samosa
4.Date Surprise
5.Puff Short Eats

சேரவிரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்
75,அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
T.Phone: 222 - 2796
(547)



**பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!**

எமது ஸ்தாபனத்தின் 45ம் வருட பூர்த்தியை முன்னிட்டு 5% - 50% விலைக்கழிவு இம்மாதம் 15.11.03 - 31.01.04 வரை பாடசாலை, பல்கலைக்கழக பாடப் புத்தங்களுக்கு வழங்கப்படும். இப்பொழுது பாடசாலை தவிர்ந்த ஏனையவர்களுக்கும் பீன்ஸ் கணக்குக் குற்றிகள் வழங்குகின்றோம். இன்றே விஜயம் செய்யுங்கள். பாடசாலை, பல்கலைக் கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருட்களுக்கான மூலதனப் பொருள்கள், அழிபொருள்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள், அலுவலக அலுமாரி, அலுவலக மேசைகள், பயில் அலுமாரி, கம்பியூட்டர் மேசைகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P புறஜெக்ரர் மற்றும் 'அறிவு அமுது', அந்திவானம் பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவற்றையும் நீங்களே தெரிவுசெய்து ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

குறிப்பு:- எம்மிடம் டீன் குற்றிகளுக்கு பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

021 222 5542
212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-1876)



**ராஜா** யாழ்ப்பாணம்.

இன்று முதல்
தருண், த்ரீஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
**எனக்கு 20 உனக்கு 18**
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அஜித் மீராஜஸ்மின் நடித்த
**ஆஞ்சநேயா**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
**GET GARTER**
(சி-1846)

# பாதுகாப்பு அமைச்சு விவகாரமே பேச்சின் பின்னடைவுக்கு காரணம்

ஜனாதிபதிக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகள், பாதுகாப்பு அமைச்சு விவகாரம் காரணமாகவே மீண்டும் பின்னடைவுகளைச் சந்தித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்புக்களின் போதும், இந்த விவகாரம் முக்கிய இடம் பெற்றபோதிலும், அதுகுறித்து எந்தவொரு உடன்பாடுகளையும் இருவராலும் காணமுடியவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்தச் சந்திப்பில், இலங்கையின் சமாதான முயற்சிகளைத் தொடர வேண்டுமானால், நவம்பர் நான்காம் திகதிக்கு முன்னர் இருந்த நிலைக்கு அரசாங்கம் வரவேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு மாற்றீடாக, பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை பிரான்ஸ் நாட்டிலிருப்பதுபோல ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் இடையே பகிர்ந்து கொள்ளும் யோசனை பிரதமர் தரப்பால் முன்வைக்கப்பட்ட போதிலும், அதனை ஏற்க ஜனாதிபதி மறுத்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், சமாதான முயற்சிகள் ஒரு தரப்பால் மட்டும் முன்னெடுக்கப்படுவதை ஜனாதிபதி ஏற்க மறுத்துள்ள அதேசமயம், அது அனைத்துத் தரப்புக்களினாலும் இணைந்து முன்னெடுக்கப்பட வேணடும் என்று வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் தோல்வியடையுமானால், நிதியமைச்சையும் பொறுப்பேற்று காபந்து அரசொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி உத்தேசித்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது. இத்தகைய நிலையொன்று ஏற்படுமானால், நாடாளுமனறத்தைக் கலைத்து, மீண்டும் பொதுத் தேர்தலை நடாத்த ஐக்கிய தேசிய முன்னணி தீர்மானித்திருப்பதாகவும் நம்பகமான வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

### விடுதலை நூல் வெளியீடு

லண்டன் எக்ஸெல் மண்டபத்தில் இடம்பெற்ற மாவீரர்நாள் நிகழ்வில், விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'விடுதலை' நூலும், தீப்பொறி என்ற பெயரிலான ஒலிப்பதிவு சி.டியும் வெளியிட்டு வைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் போராட்ட வரலாற்றைப் புகைப்படங்கள்மூலம் இந்த ஒளிப்பதிவு சி.டி. கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# அத்துருகிரிய விசாரணைக் குழுவால் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் ஆயுதம் மறைத்து வைத்திருந்த சம்பவம் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, தனது அறிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் நேற்றுமுன்தினம் கையளித்தது.

நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்ட இந்த அறிக்கையில் பத்து விடயங்கள் அடக்கப்பட்டுள்ளன. இந்த விசாரணைக்கான அறிக்கையை இந்தக் குழுவில் இடம்பெற்ற ஓய்வுபெற்ற நீதிபதியான தர்மசிறி ஜெயவிக்கிரம தயாரித்திருந்தார்.

அத்துருகிரிய வீட்டில் இராணுவத்தினரால் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டதாகவும், அதனுடன் தொடர்புடைய இராணுவத்தினரை பொலிஸார் கைது செய்து பொலிஸ் காவலில் வைத்திருந்தமை தொடர்பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கவே இந்த ஆணைக்குழு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# இருவேறு சம்பவங்களில் இரு புலிகள் வீரச்சாவு!

முல்லைத்தீவு மாவட்டம் - முத்தையன்கட்டுப் பிரதேசத்தில் எதிர்பாராமல் நடந்த விபத்தொன்றில் கப்டன் கடலமுதன் என்றழைக்கப்படும் இளவாலையைச் சேர்ந்த யோகராஜா கோபிநாத் என்பவர் வீரச்சாவடைந்துள்ளார்.

அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் கரடியனாறுப் பகுதியில் அரவம் தீண்டியதால், இரண்டாம் லெப்டினன்ட் தீபன் என அழைக்கப்படும் மட்டக்களப்பைச் சேர்ந்த தங்கராசா மோகனக்குமார் என்பவர் வீரச்சாவடைந்துள்ளதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

# மூதூரில் பதுங்குகுழி அமைப்பதை விடுதலைப் புலிகள் கைவிட்டனர்

## சுமேத பெரேரா தெரிவிக்கிறார்

(மூதூர்)

மூதூர் நாவலடி பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பதுங்குகுழிகளை, தமிழீழ விடுதலைப் புலிகள் கைவிட்டுச் சென்றுள்ளதாக ராணுவப் பேச்சாளர் சுமேதப பெரேரா தெரிவித்தார்.

மூதூர் நாவலடிப் பிரதேசத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 500 மீற்றருக்கு அப்பால் தமிழீழ விடுதலைப் புலிகள் புதிய பதுங்குகுழிகளை அமைத்து வருவதாக மூதூர் பொலிஸார் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலைக் கிளையிலிருந்து இரண்டு கண்காணிப்பாளர்கள் சம்பவ இடத்திற்கு நேற்றுமுன்தினம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் நாவலடிப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற்காண்ட பேச்சு வார்த்தையினை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் புதிய பதுங்குகுழிகள் அமைப்பதனைக் கைவிட்டு அங்கிருந்து விலகிச்சென்றதாக கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார். (01)

## யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக

# முன்னைய ஆட்சியில் இருந்தவர்கள் சகல வளங்களையும் பயன்படுத்தினர்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கம் அனைத்து வளங்களையும் யுத்தத்திற்காக பயன்படுத்தியது எனினும் 2001-ம் ஆண்டு வரை யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முடியாமற் போனதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் வெல்பிட்ட பகுதியில் நடந்த மக்கள் சந்திப்பின் போதே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டாலும் அரச நிறுவனங்கள் ஆட்களை குறைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படுகின்றன என குறிப்பிட்ட பிரதமர், வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்காக நிலையான கொள்கைத் திட்டம் ஒன்றை வகுப்பது அவசியம் என்று தெரிவித்தார்

வேலை வாய்ப்புக்களை வழங்க முடியாத கொள்கைத் திட்டங்களை வகுப்பதிலும் பார்க்க வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க உலக வர்த்தக சந்தையுடன் போட்டியிடக்கூடிய வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பது அவசியம் என்றும் தெரிவித்தார்.

# கதிர்காமருக்கு கிடைத்த தோல்வி தமிழருக்குக் கிடைத்த வெற்றி!

## தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவிப்பு

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் பதவிக்கு போட்டியிட்ட லக்ஷ்மன் கதிர்காமர் எம்.பி. தோல்வியடைந்தமை தமிழருக்கு கிடைத்த வெற்றியாகும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் தோல்வியடைந்தமை வரவேற்கத்தக்கது என்று ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செலவம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்ட கதிர்காமர் இத்தகைய பதவிக்கு தகுதியற்றவர். இவருக்கு ஆதரவு வழங்க வேண்டாம் என நாம் பொதுநலவாய நாடுகளுக்கு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

லக்ஷ்மன் கதிர்காமரின் தோல்வி தமிழருக்கு கிடைத்த வெற்றியாகும் என்று அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

வட - கிழக்கில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களை நியாயப்படுத்திய கதிர்காமருக்கு இத்தகைய தோல்வி நல்ல படிப்பினையாக அமையும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# செயலாளர் பதவியில் தோல்வி; எதுவித வருத்தமும் இல்லை

## லக்ஷ்மன் கதிர்காமர்

கொமன் வெல்த் செயலாளர் பதவிப் போட்டியில் தோல்வியடைந்தமையிட்டு, தான் எதுவித வருத்தமும் அடையவில்லை என, முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

அத்துடன், ஆபிரிக்காவின் அரசாங்கங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே தான் இந்தப் பதவியில் போட்டியிட்டதாகவும் தெரிவித்தார்.

நைஜீரியாவில் நடந்த செயலாளர் பதவிக்கான போட்டியில் கதிர்காமர் 11 வோட்டுக்களையும், மக்கின்னன் 41 வோட்டுக்களையும் பெற்றிருந்தனர்

இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு மற்றம் ஏழு ஆபிரிக்க் நாடுகளும் கதிர்காமருக்கு ஆதரவாக வாக்களித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாத நடவடிக்கைக்கு ஆதரவான

# பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவாகச் செயற்படும் நிவிட்டிகல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸாருக்கு எதிராக உடனடியாக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார், இரத்தினபுரி மாவட்ட பொதுஜன முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரான பிரேமலால் ஜெயசேகர.

கடந்த வாரம் இதுதொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு, அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

ஆளும் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரின் மகனொருவர் - கடந்த மாதம் 9 ஆம் திகதி, பொலிஸ்நிலையம் அருகில்வைத்து வானைநோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார். அத்துடன் வழமையாக இவர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறார். இதற்கு சில பொலிஸாரும் உடந்தையாக இருக்கின்றனர். அவர்கள் இந்தச் செயற்பாட்டுக்கு ஊக்கமும் கொடுக்கின்றனர்.

அத்துடன் இவர் சிலபேரை கொலை செய்யுமாறும் நிவிட்டிகல பொலிஸ் நிலையத்திற்கு உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக இரத்தினபுரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு தான் கடிதம் எழுதியுள்ளதாகவும் நிவிட்டிகல பொலிஸ் பிரிவின் ஊடாக குறித்த நபர் மீது விசாரணையை மேற்கொள்ளுமாறும் தனது கடிதத்தில் தெரிவித்திருப்பதாகவும், பிரேம்லால் ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

ஆனால் இவரது இந்தக் குற்றச்சாட்டுக்களை நிவிட்டிகல பொலிஸார் மறுத்துள்ளதுடன் எதுவித உண்மைத் தன்மையும் இவரது கூற்றில் இல்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

# மணல்காட்டுப் பகுதியில் படையினர் கண்ணிவெடிகளை புதைக்கின்றனர்

மணல்காட்டுப் பகுதியில் படையினர் கண்ணிவெடிகளை புதைத்ததன் காரணமாக மூன்று கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மணல்காட்டுப் பகுதியில் சவுக்கு மரங்கள் அதிகமிருக்கும் பகுதிகளுக்கு அண்மையில் கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து படையினர் கண்ணிவெடிகளை புதைத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் கடந்த ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதியிலிருந்து படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.

2006 ஆம் ஆண்டுக்குள் இலங்கையை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கோடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த நான்காம் திகதி அதற்கான பிரச்சார நடவடிக்கையை ஆரம்பித்துள்ள நிலையில், படையினர் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமது நிலைகளை பலப்படுத்தும் நோக்கோடு படையினர் மிருசுவில் பகுதியில் அமைந்துள்ள தனியார் காணிகளுக்குள் காணப்படும் பனை மரங்களையும் நேற்று முன்தினத்திலிருந்து தறித்து வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# பொலிஸ் காவலில் இருந்த கைதிகள் தப்பியோட்டம்!

## மிறிகானவில் சம்பவம்

(கொழும்பு)

மிறிகான பொலிஸ் நிலைய காவலில் வைக்கப்பட்டிருந்த நான்கு கைதிகள் கடந்த வெள்ளிக்கிழமை தப்பியோடிவிட்டதாக அப்பகுதி பொலிஸார் தெரிவித்தனர்.

போலியான சாரதி அனுமதிப் பத்திரங்கள் வைத்திருந்ததாலேயே இந்த நால்வரும் கைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மனித உரிமைகள் ஆணையகத்தைச் சேர்ந்தவர்கள் வந்து கைதிகளுடன் கலந்துரையாடிவிட்டு குறித்த நபர்கள் நால்வரையும் வேறு ஒரு காவல் அறைக்கு அழைத்துச் சென்றுகொண்டிருந்த வேளையிலேயே இவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பியோடியவர்களைக் கண்டு பிடிக்க மிறிகானா பொலிஸ் பிரிவில் விசேட படையணி ஒன்று அமைக்கப்பட்டு தேடுதல் நடைபெற்று வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## மூன்றாவது அகவையில்



பெயர் : கி.கிருஷாளினி
முகவரி : கற்கோவளம், பருத்தித்துறை.

## ஏழாவது அகவையில்

பெயர் : மு.நதிஷ்ஷா
முகவரி : மூளாய் வடக்கு, சுழிபுரம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------
பெற்றோர் ஒப்பம்


# வெட்டுப்புள்ளி விபரம் இம்மாத இறுதிக்குள்

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் பற்றிய விபரங்கள் - இம்மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு 14 ஆயிரத்து இருநூற்று 60 பேர் பல்கலைக்கழக அனுமதியைப் பெறவிருக்கின்றனர்.

பல்கலைக்கழக அனுமதிகளுக்காக 31 ஆயிரம் விண்ணப்பப்படிவங்கள் கிடைத்துள்ளதாகவும், இது கடந்த ஆண்டு பல்கலைக்கழக அனுமதிகோரி விண்ணப்பித்தவர்களிலும் பார்க்க, ஆறாயிரத்தால் அதிகரித்திருப்பதாகவும் பல்கலைகக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## சாதாரணதரப் பரீட்சையில்

# ஆள்மாறாட்டம் செய்த பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரால் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில், ஆள்மாறாட்டம்செய்து பரீட்சை எழுதிய மாணவர்கள் இனங்காணப்பட்டு, பரீட்சை மேற்பார்வையாளர்களால் மண்டபத்திலிருந்து வெளியேற்றப்பட்ட சம்பவங்கள் பல இடங்களிலும் இடம்பெற்றுள்ளது.

கணிதம் மற்றும் ஆங்கிலபாடப் பரீட்சையின்போது ஆள்மாறாட்டம் செய்து, பரீட்சை எழுதிய பல தனிப்பட்ட பரீட்சார்த்திகள் - பரீட்சைமேற்பார்வையாளர்களால் இனங்காணப்பட்டு, வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் - ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்திலும், ஊரெழு கணேசா வித்தியாசாலையிலும் இடம்பெற்றுள்ளதாகவும், பரீட்சார்த்திகளின் அடையாள அட்டைகளில் செய்யப்பட்ட மோசடிகளை இனங்கண்டு, மண்டபத்திலிருந்து பரீட்சார்த்திகள் வெளியேற்றப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.(83)

# ஒவ்வொரு போராளியும் சண்டைக்குச் செல்லும்போது அதனைப்பற்றி எழுதும்படி சொல்லியே சென்றனர்

## ‘விழுதாகி வேருமாகி’ நூல் அறிமுக விழாவில் புரட்சிகா

ஒவ்வொரு போராளிகளும் சண்டைக்கு செல்லும் போது, முதல் இந்தச் சண்டையைப்பற்றி எழுதுங்கள். நாங்கள் செய்கின்ற இந்த சண்டையின் ஆக்ரோசங்களையும், உண்மைத்தன்மையையும் எழுதுங்கள் என்று சொல்லி விட்டுத்தான் சென்றார்கள் எனத் தெரிவித்தார் ‘விழுதாகி வேருமாகி’ நூலின் ஆசிரியர்களுள் ஒருவரான செ.புரட்சிகா.

அண்மையில் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நூல் அறிமுகவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

‘விழுதாகி வேருமாகி’ என்ற நூலின் கதை - உண்மையிலேயே எமது போராளிகளின் குருதி சிந்திய கதை. நூலிலே இருக்கின்ற இந்த வீராங்கனைகளில் பலர், இப்போது புதைகுழிகளிலே உறங்கிக்கொண்டிருக்கின்றார்கள், சிலர் களமுனைகளிலே தற்போதும் சாதனை புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

தமது பணியைச் செய்து முடிப்பதில் வெற்றிகண்டு, தற்போது புதைகுழிகளில் உறங்கிக்கொண்டிருப்பவர்களின் கதைதான் இந்த ‘விழுதாகி வேருமாகி’ என்ற நூலில் இடம்பெற்றுள்ளது. மாலதி படையணி தோற்றம்பெற்று, தற்போது எட்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. சூரியக்கதிர் நடவடிக்கையில், தனது முதல் களமுனை அனுபவங்ளைச் சந்தித்த மாலதி படையணி - தீச்சுவாலை என்ற இறுதிச் சமரைச் சந்தித்த மாவட்டத்திலேயே, இந்த நூலை முதலில் அறிமுகஞ் செய்யவதில் நாம் பெருமிதம் அடைகின்றோம். முதலில் சிந்தப்பட்ட குருதி, இம்மண்ணிலேயே இறுதியாகவும் சிந்தப்பட்டிருக்கிறது. இதற்குப் பிறகும் வருகின்ற நிலைமைகளை நாங்கள் சொல்ல முடியாது. ஆனால், இந்த மண்ணிலே தொடங்கிய குருதி வரலாற்றை கூறும் நூலான இந்த நூலை, இங்கு அறிமுகம் செய்வதில் நாம் பெருமிதம் அடைகின்றோம்.



தாங்கள் சண்டைபிடிக்கும் களம் இறுதிச் சமராக இருந்தபோதும், இந்த சண்டையைப் பற்றி நன்றாக எழுதுங்கள். இந்த வீர வரலாறு கட்டாயம் மக்களுக்கு தெரிய வேண்டும். அவர்களுக்கு அறியச் செய்யவேண்டும் என்ற வேண்டுகோளினை எம்மிடம் விட்டுச்சென்றார்கள். முல்லைததீவுச்சண்டையில் லெப். புவனா - நாங்கள் செய்யும் சண்டைகள் பற்றி எழுதுங்கள். நான் வீரச்சாவடைந்தாலும், அந்தச் சண்டையின் தன்மை பற்றியும், நாங்கள் எவ்வாறு எதிரியுடன் போரிட்டோம் என்றும் தெரிவியுங்கள் என்று கூறிவிட்டு, களத்திற்கு சென்றார். களத்திலே அவர் வீரச்சாவடைந்தார்.

இப்படி ஒவ்வொரு போராளிகளும் இந்த சண்டைகளைப் பற்றிச் சொல்லவேண்டும் என்கின்ற ஆதங்கத்துடன்தான் வீரச்சாவு அடைந்துள்ளார்கள். அவர்கள் செய்த அந்த தியாகம் - அவர்கள் சிந்திய அந்தக் குருதி என்பது உன்னதமானது. அவர்களின் தியாக வரலாற்றை, அவர்கள் செய்த அந்த சாதனைகளைக் கட்டாயமாக மக்களுக்குச் சொல்லவேண்டிய தேவை எங்களுக்கு இருக்கின்றது. அப்படியான பொறுப்பை அவர்கள் எம்மீது சுமத்திவிட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

ஆகவே, அவர்களின் ஆசையைப் பூர்த்திசெய்யும் வகையில் எழுதப்பட்டதே இந்த ‘விழுதாகி வேருமாகி’ என்ற நூலாகும் எனத் தெரிவித்தார்.

## வல்வெட்டியில் சைக்கிள் மீட்பு

வல்வெட்டி - வன்னிச்சியம்மன் கோயிலடியில் அநாதரவான நிலையிலிருந்த, பெண்களுக்கான சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை பூட்டு உடைக்கப்பட்ட நிலையிலிருந்த இந்தச் சைக்கிள் - கிராம அலுவலரால் மீட்கப்பட்டுள்ளது. சைக்கிளை கைவிட்டவர்கள்- வல்வெட்டித்துறை கிராம அலுவலருடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோழிகளுக்கு நோய் தடுப்பூசி ஏற்றல்

கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில், பிரதி சனிக்கிழமை தோறும் கோழிகளுக்கு நோய் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மேற்கொளளப்பட்டு வருவதாக, கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி எம்.சரோஜினி தேவி - கோழிப்பண்ணையாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

கரவெட்டி பிரதேசத்தில் கால்நடை அபிவிருத்தியை மேம்படுத்தும் நடவடிக்கைகளை, கால்நடை வைத்திய அதிகாரி எம்.சரோஜினி தேவி மேற்கொண்டு வருகிறார்.

இவர், கடந்த வாரம் கோழிப் பண்ணையாளர்களுக்கும், மாட்டுப் பண்ணையாளர்களுக்கும் பயிற்சிக் கருத்தரங்கொன்றை நடாத்தினார். இதில் 26 கோழிப்பண்ணையாளர்களும், 25 மாட்டுப்பணையாளர்களும் கலந்துகொண்டு, தமது பிரச்சினைகளைத் தெரிவித்துள்ளனர், (17)

## பேராதனை வெளிவாரி பரீட்சார்த்திகளுக்கு

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புக்களில், கலைமாணி இறுதித் தேர்வுக்கான பரீட்சை - யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை தொடக்கம் எதிர் வரும் 30 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

பரீட்சையில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டையும், நேர அட்டவணையும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும். இதுவரை அனுமதி அட்டையும், நேர அட்டவணையும் கிடைக்காத பரீட்சார்த்திகள், கீழ்காணும் தொலைபேசி இலக்கம் ஊடாகவோ அல்லது தொலைநகல் மூலமாகவோ தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். தொலைபேசி, தொலைநகல் இலக்கங்கள் முறையே - 08388057, 08389206. இவற்றுடன் தொடர்புகொண்டு, பரீட்சார்த்திகள் உரியமுறையில் பரீட்சைக்குத் தோற்றமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (91)

# நகை அடகு பிடிக்கும் சேவை மக்கள் வங்கியிலும் ஆரம்பம்

யாழ்ப்பாண மக்கள் வங்கிக் கிளையில் - நகை அடகு பிடிக்கும் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. யாழ். குடாநாட்டில் உள்ள 13 கிளைகளில், தற்போது ஏழு கிளைகளில் மட்டுமே நகை அடகுபிடிக்கும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, ஊர்காவற்துறை, வல்வெட்டித்துறை, சங்கானை, அச்சுவேலி, யாழ்.பிரதானவீதிக் கிளை, சுன்னாகம் ஆகிய இடங்களிலுள்ள கிளைகளிலேயே தற்போது நகை அடகுபிடிக்கும் சேவை ஆரம்பித்துள்ளது.

ஒருபவுண் நகைக்கு - 8 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதாகவும், இந்தக் கடன்களுக்கான வட்டிவீதம் 17 எனவும், மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இனிவரும் காலங்களில், குடாநாட்டிலுள்ள ஏனையகிளைகளிலும் இந்த அடகுச்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதெனவும் மக்கள் வங்கி வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.(ச)

# ஆனைக்கோட்டையில் சாராயவடிசாலை நிறுவ வலிகாமம் கொத்தணி ஏற்பாடு

(புன்னாலைக்கட்டுவன்)

ஆனைக்கோட்டைப் பகுதியில், போத்தல்களில் சாராயம் அடைக்கும் வடிசாலையொன்றை நிறுவுவதற்கு, வலிகாமம் - பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணி நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு நிறுவப்படவுள்ள வடிசாலை மற்றும் போத்தல்கள் அடைகக்கும் நிலையத்திற்குரிய உபகரணங்கள் - இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும், இதற்கான ஏற்பாடுகள் மேற்கொளளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், பதினைந்து கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்த நிலையத்திற்குரிய ஆரம்ப செயற்பாடுகள், தற்பொழுது நடைபெற்றுவருவதாகவும், கொத்தணித் தலைவர் ஆ.மெய்யழகன் தெரிவித்துள்ளார். (83)

# நெடுந்தீவு கிழக்குக்கான பஸ்சேவை ஆரம்பிக்க ஏற்பாடு

(நெடுந்தீவு)

பல வருடங்களின் பின்னர், நெடுந்தீவு கிழக்குப் பகுதிகளுக்கான பேருந்து போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

இதன் முதற்கட்டமாக - இந்தப் பகுதியின் வீதியோரங்களில் வளர்ந்துள்ள மரக்கிளைகள், பற்றைகள் போன்றவற்றை வெட்டியகற்ற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், அந்தப் பகுதி கிராம அலுவலர்கள் இந்தப் பொறுப்பை இன்றுவரை செய்துமுடிக்காமையால் சேவை தொடர்வது தாமதமாகின்றது.

இந்த விடயம் தொடர்பாக நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுகூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பல மாதங்களாகியும், இன்னும் இதற்கான ஆரம்பப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

மரக்கிளைகளை உடன் அகற்றினால், அப்பகுதிக்கான போக்குவரத்துச் சேவையை உடன் ஆரம்பிக்க வடபிராந்திய போக்குவரத்து சபையினர் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## அம்புலன்ஸ் வண்டிகள் எடுத்துவரப்பட்டன

(வண்ணை)

சுகாதார அமைச்சால், யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு, இரு அம்புலன்ஸ் வண்டிகள் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டன.

இதனால், அவசர நோயாளர்களை இடம்மாற்றுவதில் காணப்பட்ட தடங்கல்கள் நீங்கும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (111)

# கண் சத்திரசிகிச்சை

பொருளின் விம்பமொன்று கண் வில்லையூடாக விழித்திரையில் (RETINA) விழும்போது, அங்கு காணப்படும் ஒளியை உணரக்கூடிய கலங்கள், அவற்றை மின்மாற்றி நரம்புகளூடாக மூளைக்குச் செலுத்துகின்றன. பின் அவ்விம்பத்தை மூளை உணர்கின்றது. இதுவே கண்ணில் பாதிப்பற்ற மனிதனில் நடைபெறும் செயற்பபடாகும்.



தற்போது ஒளியை உணரக்கூடிய (Light sensitive) சிப்ஸ் (Chips) - கண்ணில் பொருத்துவதன்மூலம், ஒளியை மின் சமிக்ஞைகளாக மாற்றி, விம்பத்தை உருவாக்கும்முறையாக நடைமுறையில் காணப்படுகின்றது. சிப்ஸ் ஒன்றை விழித்திரையில் பொருத்துவதில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டுள்ளது. உடலின் உறுப்புகளுடன் அவைகள் ஒத்துப்போகாத நிலை (Rejection) யும் காணப்பட்டது. ஆனால், நவீன முறை முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. விழித்திரையில் இலத்திரேட்டுக்களை (Electrodes) பொருத்துவதன்மூலம், வழமையான முறையான நியுரோ ரான்மிசன் (Neurotransmission) எனப்படும் இரசாயன திரவத்தின்மூலம் கடத்தும்முறை உருவாக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக விழித்திரையிலிருந்து மூளைக்கு இவ்வாறே சமிக்ஞைகள் கடத்தப்படுகின்றன.

புதியமுறை, முற்றிலும் இரசாயன மாற்றத்தின் மூலமே நரம்பினூடாக மூளைக்குக் கடத்தப்படுகின்றது. கண்ணின் விழித்திரையின் வளைவுக்கு (Curvature) ஏற்றவாறே இக்கருவி அமைக்கப்பட்டுள்ளது.

# புரதங்கள்



புரதங்கள் மரபணுக்களினால் உருவாக்கப்படுகின்றன. கலங்கள் உருவாக்குவதிலும் புரதங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. உயிரினம் ஒன்று உயிர்வாழ்வதற்கான மூலக்கூறுகளின் இயக்கத்துக்கும் இப்புரதங்கள் காரணமாகின்றன. பழங்களை உணவாகக் கொள்ளும் ஈக்களின் (FLY) புரதக் கட்டமைப்பைத் தொகுத்துள்ளார்கள்.

புரதங்களின் உள்ளக இயக்கங்களை ஆராய்வதன் மூலம், உயிர் என்பதற்கான காரணங்களையும் அறிவதற்கு முயற்சித்துள்ளார்கள்.

மரபணுக்கள் எவ்வாறு அசைவுகளுக்கு வழிவகுக்கின்றன என்பதை ஆராயமுற்பட்டுள்ளார்கள்.


கலத்தில் காணப்படும் மரபணுக்கள் - புரதம் உருவாகுவதற்குக் காரணமாக அமைகின்றன. பல புரதங்கள் ஒன்றிணைந்து, ஒரு புரதக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு, ஒன்றுடன் ஒன்று இணையவேண்டியுள்ளது. இதன்மூலம் அசைவு ஒன்று உருவாகின்றது.

மேலும் கலம் ஒன்று தொழிற்படுவதற்கு வேண்டிய சக்தியை இப்புரதங்களே உருவாக்குகின்றன.

இதனால், வாழ்வு என்பது புரதங்களின் அசைவு எனக் கருதப்படுகின்றது.

புரதங்கள் எவ்வாறு கலத்துக்குள் இயங்குகின்றன என்பதை அறிவதன்மூலமே, உயிர் என்பது என்ன எனப் புலப்படும். மரபணுத்தொகுதி (Genomes) போல, புரத அணுத்தொகுதி (Proteome) ஒன்றை உருவாக்கவேண்டியுள்ளது.

# புதிய கிரகம்



பூமியைப்போன்ற கிரகங்கள (PLANETS) - நட்சத்திரங்களுக்கு அருகில் சுற்றிவருவதாக வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் புதிய கிரகத்திற்கு வேகா (VEGA) எனப்பெயரிடப்பட்டுள்ளது. மிகவும் பிரகாசம் மிக்கதாகவும் இது தென்படுகிறது. இவை 25 ஒளியாண்டுக்கு அப்பால் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இவை சூரியனிலும் பார்க்க 3 மட்ங்கு பெரிதாகவும், 350 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டதெனவும் அறியக்கூடியதாகவுள்ளது.

வேகா எனப்படும் இந்த நட்சத்திரத்தைச் சுற்றி, தூசிப்படலம் காணப்படுகின்றது. இங்கிலாந்தின் எடின்பரோவில் அமைந்துள்ள வானிலை அவதானநிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள சக்தி வாய்ந்த தொலைநோக்கியின்மூலம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் நெப்ரியூன் என்ற கிரகத்தைச் சுற்றி வளையமாக வாயுக்கள் இருப்பது போன்று, இந்தப் புதிய கிரகமான "வேகா" வைச்சுற்றி தூசிகள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

# பயநோய் மருந்து



காசநோய்க்காக பாவிக்கப்படும் மருந்து ஒன்றை - பயத்தினால் தோன்றும் நோய்க்கெதிராகவும் பாவிக்கலாம் என அமெரிக்காவைச் சேர்ந்த வைத்தியர்கள் தெரிவித்துள்ளார்கள்.


சிலந்தி போன்ற சிறிய பிராணிகளுக்குப் பயப்படுபவர்கள் கூட, இவற்றைப் பாவிக்கலாம். காசநோய்க்கு டிசைக்குளோசெறியின் என்ற மருந்து பாவிக்கப்படுகிறது. இந்த மருந்தை உயரமான இடங்களுக்கு ஏறுவதற்கு மிகுந்த பயத்தை தெரிவித்தவர்களுககுப் பாவித்து, சில பயிற்சிகளைக் கொடுத்தபோது, அவர்களிடம் பயம் நீங்குவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

உலகில் பல்வேறு விதமான உளவியல பயம் (PHOBIAS) காரணமாக - மில்லியன் வரையான மக்கள் உளவியல் மருத்துவர்களை நாடவேண்டியுள்ளது.

இந்த மருந்தின்மூலம் நல்ல விளைவுகளைப் பெற்றுக் கொள்ளமுடியுமா என்பதை அறிந்துகொள்ளவதற்கு "டிசைக்குளோசெறியின்" மருந்தை இந்த நோயால் தாக்கப்பட்டிருந்த நோயாளரில் 20 பேருக்குக் கொடுக்கப்பட்டது. பின் வேகமாக மேலே உயரும் படிக்கட்டுக்களில் செல்ல அனுமதித்தபோது, மருந்தை உண்டவர்களில் பயத்திற்கான அறிகுறிகள் எவருக்கும் தென்படவில்லை.

# ஒலியும் திமிங்கிலமும்

திமிங்கிலங்கள் கடலில் மனிதர்களால் ஏற்படுத்தும் ஒலிகளுக்கு, எதுவிதமான கவனமும் எடுப்பதில்லை. ஆனால், இயூபலனா கிலாசியலிஷ்" எனப்படும் ஒருவகைத் திமிங்கிலம்-கப்பல்களில் எழுப்பப்படும் அவசர சமிக்ஞைகளில் (Sirens) நாட்டம் காட்டத்தொடங்கியுள்ளது.



திமிங்கிலங்கள் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள், இதுவரை எந்தவகையான திமிங்கிலங்களும். இவ்வாறான ஒலிகளால் கவரப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்கள்.

கடலில் போர்ப் பயிற்சியில் ஈடுபடும் கப்பல்கள், பயிற்சி நடைபெறும் கடல் பிரதேசங்களில் இவ்வகையான திமிங்கிலங்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு, இவ்வொலிகளை எழுப்புவதன்மூலம் அறிந்துகொள்ளக் கூடியதாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் பலவேளைகளில் இவ்வகையான திமிங்கிலங்கள் கப்பல்களுடன் மோதுண்டு மரணமடைகின்றன. உண்மையில் எச்சரிக்கை



ஒலிகளை இவ்வகைத் திமிங்கிலங்களால் உணரக்கூடியநிலை உண்டா? என்பதை அறிந்துகொள்வதற்கு, இந்த வகைத் திமிங்கிலங்கள் ஐந்திற்கு அடையாளச் சின்னங்கள் இணைத்திருக்கிறார்கள்.

மூன்று வெவ்வேறான அபாய ஒலிகளை நீருக்குள் செலுத்தியிருக்கிறார்கள். இவற்றில் ஒன்று பொலிஸ் வாகனங்களில் பாவிக்கும் அவசரகால ஒலியாகும்.

இவ்வொலியைக் கேட்டதும், நான்கு அடையாளமிட்ட திமிங்கிலங்கள், நீரின் மேல்மட்டத்திற்கு வருவதை அவதானிகக முடிந்தது. இவற்றின்மூலம், அவசரகால ஒலிகளுக்கு மனிதர்கள் எவ்வாறு தயாராகுகிறார்களோ அவ்வாறே மிருகங்களும் உணர்ந்து தம்மைத் தயார்படுத்திக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மீன் பிடிக்கத்தடை

அவுஸ்திரேலியாவில் பவளப் பாறைகள் (Corel Reefs) அமைந்துள்ள பகுதிகளில் மீன் பிடிப்பதற்குத்தடை செய்யப் பட்ட பிரதேசமாக நாடாளுமன் றத்தின் அங்கீகாரத்துக்காக மசோதா ஒன்று சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.



இந்தப் பாறைகள் பல வித மான மீனினங்களுக்கு மறைவிட மாகவும், தமக்குத் தேவையான உணவைப் பெற்றுக்கொள்வ தற்குச் சிறந்த இடமாகவும் கரு தப்பட்டது. இந்த இடத்தைச் சார்ந்துள்ள பகுதிகளில் அதிக அளவில் மீன்களைப் பிடிக்கும் போது - நீரிலுள்ள ஒட்சிசன், காபனீர்ரொட்சைட் ஆகிய வாயுக் களிடையே சமநிலை மாற் றத்தை (IMBAVANCE) உரு வாக்கி, அப்பிரதேசத்தின் வெப்பநிலையை அதிகரிக்கச் செய்துவிடுகின்றன.

ஆழ்கடலில் அமைந்துள்ள இந்தப் பவளப்பாறைப் பிரதேசம் - பல்லாயிரக்கணக்கான உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்து வருகின்றது.

இந்தப் பிரதேசத்தில் மீன் பிடிப்பதற்குத் தடைசெய்யப்பட்டதால், வர்த்தகரீதியாக மீன்பிடியில் ஈடுபட்டுள்ள பல ஸ்தாபனங்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தபோதும், இயற்கையைப் பாதுகாத்து, சூழலின் சமநிலையை (Echlogical Balanceing) பெறுவதற்கு அவசியம் எனக்கருதப்பட்டுள்ளது.

# HIV இற்கு மருந்து



1980 ஆம் ஆண்டுகளில் விஞ்ஞானிகள் எயிட்ஸ் (Aids) எனப்படும் உயிர்கொல்லி நோய்க்குக் காரணமான எச். ஐ.வி. (HIV) எனப்படும் கிரு மியைப் பிரித்தெடுப்பதில் வெற்றிகண்டுள்ளனர். இந்த நோயைத் தடுப்பதற்கான மருந்தொன்றைக் கண்டுபிடிப் பதில் சர்வதேச முயற்சி களுக்கு இவை துணையாக இருந்தன.

ஐந்து ஆண்டுகளில் சிறந்த மருந்தொன்று கண்டு பிடிக்கப்பட்டுவிடும் என அப்போது கருதப்பட்டது. 23 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், இதுவரை சரியான மருந்தொன்று கண்டுபிடிக்கப்படவில்லை.

பொதுவாகவே நோய்த்தடுப்புக்கான மருந்துகள் (VACCINES) நோய் தொற் றிக்கொள்வதைத் தடுப்பதற்கு உதவிபுரிகின்றன.

ஆனால், எயிட்ஸ் நோய்க்கான தடுப்பு மருந்து - பாதிக்கப்பட்ட மனிதனின் நோய் எதிர்ப்பு சக்தியை (IMMUNE SYSTEM) அதிகரிப்பதற்காகவே கொடுக்கப்படுகின்றது. இதன்மூலம் இந்த நோய்க்குக் காரணியான வைரஸை அழித்து, நீண்டநாள் வாழ்வதற்கு உதவிபுரியவேண்டும்.

ஆனால், தற்போது கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள் - சரியான பலனைத் தரவில்லை. இதற்கான காரணங்களை விஞ்ஞானிகள் அறியமுற்பட்டனர்.

இந்த நோய்க்கான வைரஸ் - காலத்துக்குக்காலம், தனது இயல்புகளை மாற்றிக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மூர்ரேசன் (MUTATION) என அழைக் கப்படுகின்றது. இதனால், ஒவ்வொரு ஆண்டும் மருந்துகளை மாற்றிக்கொள்ள வேண்டி யுள்ளதாக, இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ள பேராசிரியர் 'நெயில் பேர்க்குசன்' தெரிவித்துள்ளார்.

# பழைமையான மனிதர்கள்

35000 ஆண்டுகளுக்கு முற்பட்ட முகமூடி (Mask) ஒன்று, அண்மையில் லொய்றி (Loire) என்ற பிரதேசத்தில் கண்டு எடுக்கப்பட்டது.



அம்முகமூடியில் காணப் பட்ட ஒரு துவாரத்தில்- எலும்புத்துண்டு ஒன்று இருக்கப்பட்டிருந்தது. அக் காலப்பகுதியில் அந்தவிடத் தில் நியண்டதாள் (Neand erthol) எனப்படும் மனித இனம் வாழ்ந்ததாக அறிய முடிந்தது.

அம் முகமூடிகளின் மூலம் அந்த இன மக்களி டையே கலை உணர்வு காணப்பட்டதாகப் பிரித் தானியாவின் பாறைகள் தொடர்பான அறிஞர் "போல் பான்" தெரிவித்துள்ளார்.

பழைமையான ஆற்றின் வண்டல் மண்ணை (Sediments) அகழ்வு செய்துகொண்டிருந்த நேரத்தில் - சில கருவிகளும் (Tools), எலும்புத் துண்டுகளையும் ஆய்வில் ஈடுபட்டவர்கள் கண்டு எடுத்தனர். இவற்றின்மூலம் நெருப்பை உருவாக்குவதற்கும், உணவு தயாரிப்பதற்கும் அந்த இடத்தை பாவித்ததாக அறியமுடிந்தது.

பாறைகளில் 200,000 ஆண்டுகளுக்கு முன், பல மனித உருவங்கள் செதுக்கப்பட்டிருந் தன. ஆனால், உண்மைகளை எப்போதுமே எதிர்த்திசையில் நோக்கிய ஆய்வாளர்கள் (Scepticals) - இவை தற்செயலாக ஏற்பட்டவை எனக் கருத்துத் தெரிவித்து வந்துள்ள னர்.

மேலும் பல மண்டை ஓடுகளின் மேற்பகுதிகள் மிகவும் பளபளப்பாக மாற்றப்பட்டிருந்தன.

இதன்மூலம், அக்காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் இருப்புத் தொடர்பான சடங்கு களையும் மேற்கொண்டிருந்தார்கள் என்பது தெரியவந்துள்ளது.

# திரை விமர்சனம்

## தேவதை

இயக்குநர்களில் சிலர் மட்டும்தான் நடிகர்களாக நடித்து, வெற்றிக்கொடி கட்டு வது. அதிலும், சிலர் நடிக்கப் புறப்பட்டு, தங்களுடைய பெயரை பழுதாக்கிக் கொண் டார்கள். நடிகர் + இயக்குநர் நாசர், இயக்கி நடித்த படங்கள் எல்லாம் அற்புதமான படங்கள். 1997 ஆம் ஆண்டு, அவரால் இயக்கி நடித்து வெளிவந்த படம் - தேவதை.

முற்பிறவியைப் பற்றிய ஒரு கதை. நாசர், வினித், கீர்த்திரெட்டி ஆகியோர் முற்பிறவியில் அரச வம்சத்தைச் சேர்ந்தவர்கள். கீர்த்திரெட்டி நாசருடைய காதலி. இவர்களுடைய காதல் நிறைவேறாமல், நாசர் இறக்கின்றார். அப்போது, வினித் இவருடைய எதிரியாக இருக்கிறார். பழைய காலத்தில் அரசவம்ச அம்சங்கள் தத்ரூபமாக இயக்குநரால் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

படத்தின் பிற்பாதி தற்போதைய காலத்தைக் காட்டுகிறது. இப்போது கீர்த்திரெட்டி வினித்தின் காதலி. நாசர் தனது விடுபட்ட காதலைத் தொடர நினைக்கிறார். அவர் வெற்றிபெறுகிறாரா? இதுதான் படத்தின் முழுக்கதை.

பாடல் காட்சிகள் எல்லாம் காலத்திற்கு ஏற்றவாறு படமாக்கப்பட்டிருக்கிறது. கலை நுட்பத்துடன் கூடியவாறு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இசைஞானி இளையராஜாவும், புதல் வர்களும் இசை அமைத்திருக்கிறார்கள். 'தீபங்கள் பேசும் இது கார்த்திகை மாதம்' என்ற பாடல் இன்றும் மனதில் நிற்கின்றது. ஆறு வருடங்கள் கடந்த பிறகும், கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புறநிலை அலகுகள் பிரிவினரால் இந்தப் படம் ஒளிபரப்பப்பட்டது. உண் மையில் ஒரு நல்ல படத்தைப் பார்த்து ரசித்த திருப்தி ஏற்பட்டது. தேவதை - நாசருக்கு பாஸ் மார்க்.

PNS.

# அதிகரிக்கும் யானைகள்



ஆபிரிக்காவில் காணப்படும் யானை களின் எண்ணிக்கை, நான்கு ஆண்டுகளுக் குக் காணப்பட்டவற்றி லும் பார்க்க, தற்போது அதிகரித்துக் காணப் படுவதாகக் கணிப்புகள் மூலம் தெரியவந்துள் ளது. ஆரம்பத்தில் 400,000 ஆக இருந்த ஆபிரிக்க யானைகள் தற்போது 6,60,000 ஆக அதிகரித துக் காணப்படுகின்றன.

இந்த அதிகரிப்பு எவ்வாறு ஏற்பட்டது என் பதை உலக இயற்கை பாதுகாப்பு அமைப்பு அறியமுற்பட்டுள்ளது.

தற்போது மனிதர்களால் - யானைகள் மீது மிகுந்த அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

இதனால், யானைகள் தமக்குப் பாதுகாப்புமிக்க இடங்களை, குறிப்பாக அதிக யானைகளுக்கான பாதுகாப்பு அளிக்கப்படும் (SANCTUNARY) பிரதேசங்களை நோக்கிச் செல்வதாக அறியவருகிறது.

தமது வாழ்விடங்களை இழப்பது (LOSS OF HABITATS) - யானைகளுக்கு அதிக பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது.


மேலும் பிரச்சினைகள் உருவாகும்போது, தம் இனத்துடன் இணைந்துகொள்ள முயல்வது பல உயிரினங்களிடையே காணப்படும் பொது இயல்பாகும்.

வட அயர்லாந்தில் காணப்பட்ட ஒருவகை மீன் இனமான கொட் (COD) - குறிப்பிட்ட காலத்தில் ஒன்று கூடுவதும் குறிப்பிடத்தக்கது.

# வாரம் ஒரு யோகாசனம்

## அர்த்த மகேந்திராசனம்

இவ்வாசனம் இடது கால் முட்டியை மடக்கி, இடது குதிக் கால் - வலது தொடையின்கீழ வருமாறு வைக்கவேண்டும். வலது கால் முட்டியை மடக்கி, அதன் பாதம் ஆசன வாய்க்கு அருகில் வருமாறு வைக்கவேண்டும். வலது தொடையினுடைய வெளிப்புறத்தில் இடது பாதத்தை இடுப்புக்கு வெகு அருகில் வைக கவும். வலது கையை- இடது முட்டிமேல் சுற்றிவைக்கவும். உட லின் பெரும் பகுதி இடது புறம் திரும்ப வும். வலது தோள்ப் பட்டை இடது முட்டி மேல் அழுத்திக் கொண்டிருக்கவும். இடது கணுக்காலை இடது கையால் பிடித துக்கொள்ளவும். முதுகெலும்பை மெது வாக இடதுபுறம் திருப்பவும். கழுத்தையும் இடதுபுறம் திருப்பவும். அப்போது முகவாய்க்கட்டை இடது தோளுக்கு நேராக இருக்கும். நெஞ்சை நேராக நிமிர்த்தி வைக்கவும். இயல்பாக சுவாசிக்கவும் 10 - 15 விநாடிகள் என 2 முறை செய்தால் போதுமானது.



### நன்மைகள்

இவ்வாசனம் செய்வதால், முதுகெலும்பு மாறிமாறி இரண்டு பக்கமும் முறுக்கப்படுவதால் இரத்தோட்டம் அதிகப்படுகின்றது. சுறுசுறுப்பு அதிகரிக்கிறது. இளமை ஓங்குகின்றது. இடுப்புவலி தீரும். நெஞ்சில் சளி பிடிக்காது, கழுத்து எழும்பும், சதையும் வலிமை பெறும். அழகுபெறும். வயிற்றில் ஊளைச்சதை பிடிக்காது. சிறுநீரகம் ஒழுங்காக இயங்கும்.

தருபவர் - மா.மகாநேசன்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர் -திருக்குறள்.

## நமது நோக்கு

# கதிர்காமரின் தோல்வியும் சந்திரிகாவின் படுதோல்வியும்!

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய பிரமுகரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் பிரச்சினையென்றும், விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளென்றும் சர்வதேசமெங்கும் பிரசாரம் செய்வதற்கு சந்திரிகாவால் பயன்படுத்தப்பட்ட ஒலிபெருக்கியும், ஒருகாலத்தில் புகழ்பெற்ற சட்டத்தரணியும், ஜனாதிபதியின் தற்போதைய வெளியுறவுத்துறை ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் பொதுச்செயலாளர் பதவிக்குப் போட்டியிட்டு படுதோல்வியடைந்தமையானது - இந்த வாரத்தில் சந்திரிகாவுக்குக் கிடைத்த பலத்த அதிர்ச்சியாகும்.

தோல்வி சிலசமயம் கிடைக்கும் வாய்ப்பும் இருக்கலாம் என்றுதான் சந்திரிகா நினைத்திருப்பார். ஆனால், இப்படியான படுதோல்வியொன்றுதான் கிடைக்கும் என அவர் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்.

அப்படி நினைத்திருந்தால் அவர் கதிர்காமரை இந்தத் தேர்தலில் போட்டியிட நியமித்திருக்கமாட்டார்.

அதுபோன்றுதான் கதிர்காமரும் நிச்சயமான வெற்றி ஒன்றின் எதிர்பார்ப்பில்தான் இப்போட்டியில் கலந்துகொள்ளத் துணிந்திருப்பார். சந்திரிகாவுக்கு சர்வதேசரீதியில் ஒரு காலத்தில் இருந்த மதிப்பு இன்னமும் இருக்கும் என்றும், அது தனக்கு அந்த உயரிய பொதுச் செயலாளர் பதவியைப் பெற்றுத்தருமென்றே அவர் நம்பியிருந்திருக்கவும்கூடும்.

அத்துடன், இந்த நியமனத்திற்கு கதிர்காமரை வேட்பாளராக அனுமதிக்க ரணிலும் ஒப்புக்கொண்டமையானது கதிர்காமருக்கும், சந்திரிகாவுக்கும் பெருமளவில் மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் இன்னும் அதிகப்படுத்தியிருக்ககூடும்.

இந்தப் பொதுச் செயலாளர் பதவிக்கான தேர்தலில் கதிர்காமர் வெல்லப்போவதில்லை என்பது ரணிலுக்கும் தெளிவாகத் தெரியும். மேற்குலகினதும், ஐரோப்பிய சமூகத்தினதும் சிறிலங்கா ஜனாதிபதி உட்பட சமாதான முயற்சிகள் பற்றிய நிலைப்பாடுகள் குறித்து ரணில் தெளிவாகவே புரிந்துகொண்டுள்ளார்.

மேற்குலகினதும், ஐரோப்பிய சமூகத்தினதும் ஆதரவுப் பின்னணிப் பலத்துடன் - தான் மேற்கொண்ட சமாதான முயற்சிகளை ஆரம்பக்கட்டம் முதலே அதிருப்தியுடன் சந்திரிகா எதிர்த்து வந்தமையாலும், அண்மையில் மேற்கொண்ட அதிரடி அரசியல் நடவடிக்கையால் சமாதான முயற்சிகளை அவர் முற்றாகவே சிதைக்கும் எண்ணத்தைக் கொண்டுள்ளார் என்பதை - மேற்கு மற்றும் ஐரோப்பிய சமூகம் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளமையாலும், கதிர்காமரை பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகமாக நியமிக்க மேற்கொள்ளும் சந்திரிகாவின் முயற்சிகளுக்கு அவர்கள் எந்த வகையிலும் ஆதரவு தரமாட்டார்கள் என்பதும் ரணிலுக்குத் தெரியும்.

எனவே, கதிர்காமரை வேட்பாளராக நியமிக்கும் சந்திரிகாவின் திட்டத்துக்கு அவர் முரணாக செயற்படமுனையவில்லை.

கதிர்காமருக்கு இந்தப் பதவிக்கான தேர்தலில் நிச்சயமாகக் கிடைக்கப்போகும் படுதோல்வி சந்திரிகாவிற்கான சர்வதேச ஆதரவுப் பலத்தின் பலவீனமான நிலையை பகிரங்கமாக்கிவிடும் என்பதில் ரணில் உறுதியாக இருந்தார்.

அவர் எதிர்பார்த்ததுபோல் கதிர்காமருக்குக் கிடைத்த படுதோல்வி சந்திரிகாவையே அதிகம் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

கதிர்காமர் தேர்தலுக்கு நிற்கும்போதே, தனக்கு வெற்றி கிடைக்கும் (சந்திரிகா எப்படியாவது அந்த வெற்றியைப் பெற்றுத்தருவார்) என்ற நம்பிக்கையில் அந்தப் பதவி கிடைத்தால் என்னென்னவெல்லாம் செய்வார் என்றும் அறிக்கைகள் விட்டதுதான் கோமாளித்தனமானதாகும்.

கதிர்காமரை வேட்பாளராக நியமித்த சந்திரிகா அவருக்காக ஆதரவளிக்கக்கோரி பல்வேறு பொதுநலவாய அமைப்பைச் சேர்ந்த நாடுகளின் தலைவர்களுக்கு தொலைபேசி மூலம் வேண்டுகோள்விடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் என்ன, கதிர்காமர் தோற்றேபோய்விட்டார். சந்திரிகாவும்தான். தன்மீதான சர்வதேச நம்பிக்கையும், தனக்கான ஆதரவும் மிகமோசமாக வீழ்ச்சிகண்டுவிட்டதை சந்திரிகாவுக்கு இந்தத் தேர்தல் மிகத் தெளிவாகவே உணர்த்திவிட்டது.

இனி கதிர்காமரின் பிரசார உத்திகள் சர்வதேசம் மத்தியில் விடுதலைப் புலிகள் விவகாரத்தில்கூட செல்லாது என்பதும் அவருக்குத் தெரிந்துவிட்டது. இப்போது கதிர்காமரால் சந்திரிகா கெட்டாரா? அல்லது சந்திரிகாவினால் கதிர்காமர் கெட்டாரா? என்ற நிலையில் இருதரப்புமே குழப்பத்தில் ஆழ்ந்துள்ளது.

கதிர்காமரின் இந்தத் தோல்வி - சந்திரிகாவின் இராஜதந்திரத்துக்கும், அரசியல் அபிலாஷைகளுக்கும் சர்வதேச ரீதியில் கிடைத்த பலமான அடியாகும்.

அதேவேளை, இந்த நிகழ்வானது சர்வதேச சமூகம் சந்திரிகாவுக்கு, அவரின் சமாதான முன்னெடுப்புத் தொடர்பான நிலைப்பாட்டுக்கு விடுத்த பகிரங்கமான எச்சரிக்கையுடன் கூடிய அழுத்தத்தையும் வெளிப்படையாகவே உணர்த்தியுள்ளது எனலாம்.

இதேவேளை, ரணில் கதிர்காமரின் நியமனம் தொடர்பான சந்திரிகாவின் விருப்பார்வத்துடன் முரண்படாமலே இயங்கியதன் மூலம் - சந்திரிகாவுக்கு இருக்கும் பலவீனமான சர்வதேச அந்தஸ்தையும் பகிரங்கமாக்கியுள்ளார் என்பதே உண்மை.

உண்மையில் ஜனாதிபதியின் ஆலோசகருக்குக் கிடைத்த தோல்வி, ஜனாதிபதிக்குக் கிடைத்த படுதோல்வி என்றால் மிகையில்லை.

## நாடும் நடப்பும்




செய்தி : இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்படும் தமிழக மீனவர்களை விடுவிக்க வாஜ்பாய் தலையிடவேண்டும்- ஜெயலலிதா அவசர கடிதம்

# தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை இந்திய அரசு அங்கீகரிக்கவேண்டும்

### வெகுஜன அமைப்புக்கள் ஒன்றியம் பிரதமர் வாஜ்பாய்க்கு கடிதம்

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தை - தமிழருடைய தாயகப் பிரதேசமாக ஏற்று, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை இந்தியா அங்கீகரிக்கவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் - இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

5000 ஆண்டுகளுக்கு மேலாக, இலங்கையில் வாழும் தமிழர்கள் - இந்நாட்டின் பூர்வீகக்குடிகளாவர். ஆயினும், சிங்களப் பேரினவாதிகளால் தமிழர்கள் அழிக்கப்பட்டு வந்துள்ளனர். இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் ஈழத்தமிழர்கள் இன்னமும் தங்கள் அரசியல் விடுதலையை எட்டமுடியவில்லை.

வடக்க - கிழக்கு தமிழர் தாயகம். இதனை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது. ஆதலால், தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை இந்தியா அங்கீகரிக்கவேண்டும். இதுவே எமது பேரவா. இதனையே தங்களிடமிருந்து ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இந்தியா எமது அயல்நாடு. சிங்களப் பேரினவாதிகள்- தமிழாகள்மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு அழித்தபோதெல்லாம், தாங்கள் எமக்காகக் குரல் கொடுக்காமல் மௌனம் சாதித்துள்ளீர்கள்.

ஆனால், அண்மைக்காலமாக இந்திய வெளியுறவுக் கொள்கை தொடர்பான ராஜதந்திரிகள், வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டம் தொடர்பாக வெளியிடும் கருத்துகள் - எமது மக்களின் அபிலாசைகளை களங்கப்படுத்துவதாகவும், தமிழ் இனத்தை அழிக்கமுற்படும் சிங்களப் பேரினவாதிகளுக்குத் துணைபோவதாகவும் அமைந்துள்ளன. இது தமிழ் மக்களுக்கு மிகுந்த கவலையளித்துள்ளது. இது குறித்து தாங்கள் பொருத்தமான ஏற்பாட்டை மேற்கொள்வதே எமதுவிருப்பம்.

தாங்கள் வெளியுறவு அமைச்சராக இருந்த காலத்திலேயே, இலங்கையின் இனப்பிரச்சினை தீவிரம் பெற்றிருந்ததென்பதை தாங்கள் நன்கறிவீர்கள்.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் தங்கள் அரசியல் விடுதலைக்காகப் பல போராட்டங்களை முன்னெடுத்தார்கள். ஆனால், சிங்கள தேசம் - தமிழ் மக்களை ஆயுதமுனையில் அடக்கி, வன்முறைகளைக் தூண்டிவிட்டது. சிங்களப் பயங்கரவாதம் தீச்சுவலையாகப் பரவிற்று. உயிர்கள், உடமைகள் வகை தொகையின்றி அழிக்கப்பட்டன. அவசர காலச்சட்டம், பயங்கரவாதச்சட்டம் என்பன பிறப்பிக்கப்பட்டு, தமிழ் இளைஞர், யுவதிகள் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்டு சிறைக்குள் அடைக்கப்பட்டனர். நீதித்துறை - அரசின் அனைத்து அராஜகத் தளங்களுக்கும் துணையாக நின்றன. இது தங்களுக்குத் தெரிந்த விடயமே. அதுபோன்று மனச்சாட்சியுள்ள உலகின் கண்களுக்குத் தெரிந்ததொன்றே.

அரசின் மனித உரிமை மீறல்கள், மொழிவாரி யான இனப்படுகொலைகள் யாராலும் தடுத்து நிறுத்தப்பட முடியாதவொன்றாக இருந்துள்ளது. பொறுக்கமுடியாத இளை ஞர்கள் - ஆயுதம் ஏந்திப்போராடுவதைத்தவிர, வேறுவழியில் லாமல் அதனையே தேர்ந்தெடுத்தனர். அதுவே தமது மண்ணை மீட்கும் போராட்டமாகப் பரிணமித்து, தமிழீழ விடுதலைப் புலிக ளின் தலைமையின்கீழ் கடந்த முப்பது வருடமாக ஆயுதப் போராட்டமாக வளர்ந்து நிற்கின்றது.

இந்த முப்பது வருடகால விடுதலைப் பயணத்தில் ஒரு லட்சம் தமிழ்பேசும் மக்கள் அரசினால் இனப்படுகொலைக்கு ஆளாகியுள்ளனர். வகை தொகையின்றி உடமைகள் நாசமாக்கப்பட்டுள்ளன. தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த நிலமெல்லாம் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. வாஞ்சை யோடு வாழ்ந்த மக்கள் - புலம்பெயர்ந்து, அகதிகளாகி ஆங்காங்கே வாழ்கின்றனர்.

இந்த நிலையில், சமாதான முயற்சிகள் நோர்வே அரசினால் முன்னெடுக்கப்பட்டது. எனினும், தென்னிலங்கை அரசியல் சூழ்நிலை - சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருநது வருகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண, சமாதானம் நிலைக்க - இந்தியா உதவவேண்டும் என்பதே எமது ஆவல். விடுதலைப்புலிகள் - தமிழ்மக்களின் விடுதலைக்காகத் தம்மைத் தியாகம் செய்துள்ளனர்.

எமது விடுதலைப் போராட்டம் ஒரு தீர்க்க தரிசனமான அரசியல் முடிவென்பதை அனைத்து தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டு, துறைசார்ந்த ரீதியில் பங்களித்ததால் போராட்டம் உச்சநிலை அடைந்து, உலகின் கவனத்தை ஈர்த்திருக்கின்ற வேளையில், இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜோஜ் பெர்னான்டஸும், பாதுகாப்பு அமைச்சு சார்ந்த அதிகாரிகளும் - தமிழ் மக்களது வீரியம்பெற்றுள்ள போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையிலும், இன்றைய சமாதான முன்னெடுப்புக்களைக் குழப்பும் விதத்திலும் கருத்துக்களை வெளியிட்டு இருப்பது, தேசத்தின்பால் உணர்வுகொண்ட மக்களால் ஜீரணிக்கமுடியாத ஒன்றாகும்.

அதுமட்டுமல்ல, இவ்வாறான அறிக்கைகள் பேரினவாத வன்முறைக் கும்பல்களுக்குத் தீனிபோடுவதாக அமைவதோடு, நீண்டகாலமாகத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை களங்கப்படுத்துவதாகவே அமையும்.

கடந்த வாரம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை - இந்திய திட்ட உபாய மாநாட்டில், தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் பற்றித் தவறான கருத்துக்கள் இந்திய அதிகாரிகளால் முன் வைக்கப்பட்டதாக அறிகிறோம். இவை உடனடியாக மறுதலிக்கப்படவேண்டுமென ஈழத்தமிழ் மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

இந்தியாவை விரும்புகின்றோம். இந்திய மக்களை நேசிக்கிறோம். எமது உடன் பிறப்புக்களான ஆறுகோடி தமிழ் மகள் அங்கு இருக்கிறார்கள். இந்தியாவை நாங்கள் நட்பு சக்தியாக, நேச சக்தியாகவே கருதுகின்றோம். ஈழத்தமிழர்களோ, ஈழத்தேசிய தலைமையோ அன்றி - ஈழத்தமிழர்களின் விடுதலைப்போராட்டமோ, இந்தியாவின் தேச நலன்களுக்கோ அல்லது பொருளாதார நலன்களுக்கோ இடையூறாக இருக்காது என்பதை ஆழமாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆனால், தமிழினத்தை பூண்டோடு அழிக்க கங்கணம் கட்டிநிற்கும் சிங்களப் பேரினவாதிகளுக்குத் துணைபோவதாக இந்தியா இருக்ககூடாது என்பது எமது எதிர்பார்ப்பு.

இலங்கை தொடர்பாகவும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் இந்தியா கடைப்பிடித்து வரும் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்துவதையே தமிழ்மக்கள் விரும்புகிறார்கள். எமது உணர்வுகளை இக்கடிதமூலம் தெரிவித்துக் கொள்வதில் மனநிறைவடைகிறோம்.

எமது விடுதலைப் போராட்டத்தினைப் பல நெருக்கடிகள், அழுத்தங்கள், பல தலையீடுகள் என்பவற்றிற்கு மத்தியிலும் எமது உரிமைப் போராட்டமாக வளர்த்தெடுத்திருக்கிறோம். தொடர்ந்தும் எமது உரிமையை வென்றெடுக்க இறுதிவரை போராடுவோம் என்பதை உறுதிபட உரைக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்

### சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் இருக்கின்ற பெண் கைதிகளின் உரிமையைப் பாதுகாக்க, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் - றோமின் மன்சூர் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

சிறைச்சாலையிலுள்ள பெண்களுக்காக சில உரிமைகள் வழங்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகவும், அதன் முதற்கட்டமாகப் பெண்களுக்குரிய வணக்கஸ்தலங்கள் அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்று தியானசாலையொன்று திறந்துவைக்கப்பட்டது. இதன்மூலம், சிறைச்சாலைக்குவரும் பெண்கள்- சமூகத்திற்கு மீண்டும் செல்லும்போது, அவர்களது ஒழுக்கங்கள் சிறந்ததாக இருக்கும் எனவும், அவர்களை மீண்டும் சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டிலுள்ள பெண்களின் சிறைச்சாலைகள் தோறும் வணக்கஸ்தலங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீதிகளில் எழுதப்படும் விதி! இது சதியா? இதுதான் கதியா?



**வங்கிப் பாதுகாப்பு ஊழியர்**



பொதுவாக இது பற்றிக் கூறுவதாக இருந்தால், காங்கேசன்துறை வீதி அகலம் குறைந்த வீதி. இந்த வீதியின் கிழக்குப் பக்கமாக ரெலிக்கொம் நிறுவனத்தால், தொலைத்தொடர்புக்காகக் கிடங்குகள் வெட்டப்பட்டுள்ளன. இவை துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்யும் பாதசாரிகளுக்குப் பெரும் இடையூறாக உள்ளது.

பெரிய வாகனங்களான பஸ், லொறி என்பன வரும்போது, வீதியின் கரைக்கு ஒதுங்கவேண்டும். இந்த நேரத்தில் இவ்வாறான கிடங்குகள் ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக உள்ளன. அத்துடன், இந்தக் கிடங்குகளில் தண்ணீர் தேங்கி நிற்பது, போக்குவரத்துக்கு மிகப்பெரிய இடையூறாகவுள்ளது.

ஏனைய வீதிகளுடன் ஒப்பிடுகையில், நகரப்புற வீதிகள் மிகமோசமான நிலையில் உள்ளன. இதுவரைகாலமும் அவற்றின் தன்மையில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாநகரசபை வருமானங்களைப் பெற்றுக்கொள்கிறது. ஆனால், வீதிகளைத் தகுந்தமுறையில் பராமரிப்பதில்லை.

உரிய அதிகாரிகள் - இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தால், பொது மக்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்குமென நான் நினைக்கிறேன். பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் பாடசாலைக்குச் செல்லும்போது, கிடங்குகளில் உள்ள தண்ணீரை வாகனங்கள் எத்துவதால், அவர்களுடைய சீருடைகள் அழுக்கடைகின்றன. இது அவர்களுக்கு மனக்கவலையை அளிக்கும். இந்தச் சம்பவங்கள் அவர்களின் கல்வியைப் பாதிக்கும் நடவடிக்கையாகும்.

மேலும், தற்போது க.பொ.த (சா/த) பரீட்சை நடைபெறுகிறது. இதற்குச் செல்லும் மாணவர்களின் ஆடைகளில் சேறு அடிப்பதால், அவர்கள் குழப்பம் அடைந்து, பரீட்சையைச் சிறப்பாக எழுதமுடியாமலிருக்கும்.

**க.பாலசிங்கம்**
**ஓட்டோ சங்கச் செயலாளர்.**



வீதிகள் ஒழுங்கின்மையால், எமது வாகனங்கள் பாதிக்கப்படுகின்றன. குன்றும் குழியுமாக வீதிகள் இருப்பதால், நாம் வாகனங்களை வெட்டித் திருப்பி ஓடவேண்டியுள்ளது. இதனால், வாகனங்கள் அடிக்கடி பழுதடைகின்றன. இதைவிட விபத்துக்களும் அதிகமாக நிகழ்கின்றன. ஏனெனில், வீதியில் ஓர் கிடங்கு இருக்குமெனக் கண்டால், கிடங்கையும் பார்க்கவேண்டும், எதிரேவரும் ஏனைய வாகனங்களையும் பார்க்கவேண்டும், முன்னால்வரும் பாதசாரிகளையும் பார்க்கவேண்டும். இவ்வாறு ஒரேநேரத்தில் மூன்று, நான்கு விடயங்களை அவதானிக்கவேண்டி இருப்பதால், விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாயுள்ளன.

பயணிகளை, குறிப்பாக கர்ப்பிணிப்பெண்கள் உட்பட காயப்பட்ட நோயாளிகளை ஏற்றிக்கொண்டு செல்லும்போது, மிகுந்த சிரமப்பட்டே வாகனங்களைச் செலுத்தவேண்டியுள்ளது.

நாம் எவ்வளவு கவனமாக வாகனங்களைச் செலுத்தினாலும், வீதியிலுள்ள குண்டு, குழிகளில் வீழ்ந்து எழும்பவேண்டியுள்ளது. அந்த நேரங்களில் அவர்கள் படும் வேதனைகளைப் பார்த்தால், எமக்கே சகிக்கமுடியாமல் உள்ளது. ஆனால், அதனைத் தவிர்க்கமுடியாதபடி வீதிகளின் நிலைமை உள்ளது.

ஏ-9 பாதையில் செல்வோமாக இருந்தால்- சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளுக்குச் செல்வதென்பது உயிரைப் பணயம்வைத்துப் போவதுபோலுள்ளது. நகரப்பகுதியில், யாழ். பஸ்நிலையத்திற்கு அருகாமையிலுள்ள வீதி, ஒரே குண்டும் குழியுமாக இருக்கின்றது. அத்துடன், இலுப்பையடிச்சந்திப் பகுதி இன்னும் மோசமாக உள்ளது.

ரெலிகொம் இணைப்புக்களை வழங்குவதற்காக வீதிகளைத் தோண்டிவிட்டு, அதனைச் சீமெந்தால் மண்ணைப்போட்டு மூடியுள்ளார்கள். கல், தார்போட்டுச் சரியானமுறையில் செப்பனிடப்படவில்லை.

சிறிதுகாலத்திற்கு முன்னர் யாழ். நீதிவானால், நீதிமன்றில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதில் பங்குகொண்ட மாநகர ஆணையாளர்- ஒரு கிழமைக்குள் குண்டும் குழியுமாகவுள்ள வீதிகளைச் செப்பனிடுவதாகக் கூறியிருந்தார். ஆனால், இதுவரை செய்துமுடிக்கவில்லை.

அவ்வாறு கூறியபிற்பாடு - ஆஸ்பத்திரி வீதி கொஞ்சத்தூரம் மட்டும் செப்பனிடப்பட்டது. இது ஓரளவிற்குப் பாராட்டக்கூடிய விடயம். வீதிகளைச் செப்பனிடும்போது, சரியான முறையில் அவற்றைச் செப்பனிடுவதாக நமக்குப்படவில்லை.

நாவற்குழிப் பகுதியிலே பாரிய குழியொன்று உள்ளது. அதனை அடையாளப்படுத்த தார்ப் பீப்பா ஒன்றை வைத்துள்ளார்கள். ஆனால், அது இரவுவேளையிலே தெரிவதில்லை. மக்கள்மீது கரிசனையுள்ள ஒரு நிர்வாகமாக இருந்தால், அந்தப் பீப்பாவிற்கு வெள்ளைப் பூச்சைப் பூசியபின் வைத்திருக்கலாம். குறிப்பிட்டுச் சொன்னால், ஒருவரும் தமது கடமைகளைச் சரிவரச்செய்வதில்லை.

மழை நேரங்களில் வீதிகளைச் செப்பனிடுகிறார்கள். அந்தவேளைகளில் போடப்படும் தார் வீதிகளில் ஒட்டாது. வாகனங்கள் வீதியால் செல்லும்போது, போடப்பட்ட கற்கள் வெளி வந்துவிடுகின்றன. இவற்றை வெயிற்காலங்களில் செய்தால், மிகவும் நன்றாக இருக்கும். அதனை அதிகாரிகள் உணரவேண்டும்.

**இன்றைய சூழ்நிலையில் எமது மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. அவற்றுள்ளே பிரதானமான விடயம் - குன்றும் குழியுமாகவுள்ள வீதிகளாகும். சமாதான காலத்திற்கு பின்னே ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்ட பின்னர் -**

**யாழ்.குடாநாட்டிற்கு வந்துசெல்லும் வாகனங்களின் எண்ணிக்கை - நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமேயுள்ளது. இந்த நிலையில், மோசமாகவுள்ள குடாநாட்டு வீதிகள் மக்களின் 'உயிரை விழுங்குவதற்காக வாயைப் பிளந்துகொண்டிருக்கும் அரக்கர்களைப்போல, இடைக்கிடை பாரிய குழியைக் கொண்டுள்ளது. இந்த வீதிகளின் நிலைமை தொடர்பாக பல்வேறு தரப்பினருடைய கருத்துக்களையும் கேட்டறிந்தபோது, அவர்கள் தெரிவித்தகருத்துக்கள் இங்கே பிரசுரமாகின்றன.**

**சி. இராமலிங்கம்**
**மாநகரசபை ஆணையாளர்**



வீதி திருத்த வேலைகள் மூன்று பிரிவினரால் மேற்கொள்ளப்படுகின்றன. ஒன்று - மாநகரசபைக்குச் சொந்தமான வீதிகள், இரண்டாவது - வதிகள் அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான வீதிகள், மூன்றாவது - வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதிகள். அவரவர்க்குச் சொந்தமான வீதிகளில் திருத்த வேலைகளை அவர்களே மேற்கொள்ளவேண்டும்.

மாநகரசபையைப் பொறுத்தவரையில், கடந்த 20 வருட யுத்தத்தினால், முழு அளவில் வீதிப்பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ள முடியவில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. பிரதானமானது நிதிப்பிரச்சினை.

அதாவது யுத்தகாலத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரும்பாலும் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. இந்தவேளையில் வரி அறவீடுகள், குறிப்பாக சோலை வரி அறவீடு மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

அந்தக் காலத்தில் வீதிப்புனரமைப்புக்கான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதும் மிகக் கடினமாகவிருந்தது. தற்போது ஏ-9 பாதை திறந்த பிற்பாடு, கணிசமான வேலைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். பிரதேசசபைகளுடன் ஒப்பிடும்போது, நாம்தான் கணிசமான தொகையைப் புனரமைப்பு வேலைகளுக்காக இந்த வருடம் செலவிட்டுள்ளோம்.

நீண்டகாலமாக வீதிகள் புனரமைக்கப்படாததால், அநேக வீதிகள் மோசமாகப் பாதிப்படைந்துள்ளன, பழுதடைந்த நிலையிலேயே தொடர்ந்தும் இருந்து விடுகின்றன. நாம் வீதி திருத்தவேலைகளை மழைகாலங்களில் மேற்கொள்வதாக மக்கள் குறைப்பட்டுக்கொள்கிறார்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவ்வாறுள்ளன. அந்தக் காலப்பகுதியில்தான் பெரும்பாலும் எமக்கு அரசநிதி ஒதுக்கீடு கிடைக்கின்றது. நிதி வழங்கப்படுவது தொடர்பாக அறிக்கைகள் அரசுமூலம் எமக்குக் கிடைத்த பிற்பாடுதான், நாம் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யமுடியும்.

திடீரென எல்லாத் திணைக்களங்கள், நிறுவனத்திற்கும் - வீதிப்புனரமைப்புக்கென ஒரே வேளையில் நிதியை வழங்கும்போது, மூலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்றது. கல் போன்றவற்றை நாம் வேறு மாவட்டங்களில் இருந்து பெறமுடியாதுள்ளது. எல்லாவற்றையும் இங்கிருந்துதான் பெற வேண்டியுள்ளது.

அதிலும், உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை, காணிச்சொந்தக்காரர்கள் நாட்டில் இல்லாமை போன்ற காரணங்களால், கல் அகழ்வது பிரச்சினையாகவுள்ளது. இதனால், விலையும் அதிகரித்து செல்கிறது. தனியாரைப்போல, நாம் நினைக்கும் விலையைக் கொடுத்து பொருட்களைப் கொள்வனவு செய்ய முடியாது. அரசாங்க விலை நிர்ணயக்குழுவால் தீர்மானிக்கப்பட்ட விலைகளுக்கே நாம் பொருட்களைக் கொள்வனவு செய்யமுடியும்.

கூறுவிலை கோரி, வழங்குநர்களை தெரிவு செய்யும்போது சிக்கல் ஏற்படுகிறது. தனியார் கூடுதல் விலையைக் கொடுத்து கொள்வனவு செய்யத்தயாராக இருப்பதால், வழங்குநர்கள் பொருட்களை அவர்களுக்கே வழங்குகிறார்கள்.

வீதிப்புனரமைப்புக்கென தொகையாக நிதி எமக்குக் கிடைப்பதில்லை. குறிப்பிட்ட சில வீதிகள் என்று பெயர் கூறித்தான் எமக்கு நிதி ஒதுக்கப்படும் அரசு ஒதுக்கிய நிதி குறித்த காலத்திற்குள் செய்துமுடிக்கவேண்டும். இல்லாவிடில் அது திரும்பிவிடும்.

எனவே, வேலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து செய்துவருகிறோம். தவிர்க்க முடியாத சில தடங்கல்கள் ஏற்படுகின்றது. மழை வராது என எதிர்பார்த்து வேலை செய்ய முடியாது. சில சூழ்நிலைகளில் மழை இடையூறாக இருக்கின்றது.

மற்றும் மக்கள் நேரடியாக எம்மையே கோபிக்கிறார்கள். எமக்குள்ள பிரச்சினைகள், இடையூறுகள் தொடர்பாக அவர்கள் புரிந்து கொள்வதில்லை

**கே. பாலச்சந்திரன்**
**வணிகர் கழக நிர்வாக உறுப்பினர்.**




பெரிய கடைவீதி மிகவும் மோசமாகவுள்ளது. இதனை அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது, மாநகரசபை ஆணையாளரிடம் எடுத்துக் கூறியுள்ளோம். திருத்துவதாகக் கூறியுளளார். எப்போது செய்வார்கள் என்பது எமக்குத் தெரியாது. இதற்கு முன்னரும் பல தடவை இது தொடர்பாக முறையிட்டுள்ளோம்.

எனது கருத்து என்னவெனில், இந்தவேலைகள் நாம் சொல்லாமலேயே அதிகாரிகள் செய்யவேண்டியவை. ஆனால், அவர்கள் இவற்றைக் கவனத்தில் எடுப்பதில்லை. நவீனசந்தையின் உட்புறமுள்ள வீதி - மிகவும் மோசமாகவுள்ளது. இதற்கு அருகில் உணவகம் ஒன்றும் உள்ளது. இதனால், சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

வீதிகளைச் செப்பனிடுவதற்குப் பொதுவாக ஞாயிற்றுக்கிழமைகள் பொருத்தமானவை. வீதிகள் குழிகளாக இருப்பது - வியாபாரிகளுக்கே பெரிதும் பாதிப்பு. மழைகாலத்தில் வாகனங்கள் போகும்போது, வெள்ளத்தை அடிக்கின்றன. இவை காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கும் புடவைகள், பொருட்களில் படுவதால் அவை பழுதடைந்து விடுகின்றன.

அதனைவிட, மக்கள் கடைகளுக்கு வருவதற்கு இடையூறாகவும் உள்ளது. வெளிநாட்டில் இருந்து வரும் நண்பர்கள் கேட்கிறார்கள்- யாழ்ப்பாணம் முன்னர் இருந்ததைவிட, தற்போது குறுகிவிட்டது என. உலகம் வெகுவாக அபிவிருத்தி அடைந்துவர, நாம தற்போது ஐம்பது வருடம் பின்னோக்கி சென்று கொண்டிருக்கிறோம்.

**ரீ.ஸ்ரீனிவாசன்**
**பிரதம பொறியியலாளர்**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**



வீதிப்பராமரிப்பு வேலைகளை நாம் வருடம்புராவும் மேற கொண்டுதான் வருகிறோம். ஆனால், நாம் தற்போதுதான் வேலைகளை மேற்கொளவதாக எண்ணுகிறார்கள். இதற்குக் காரணம் -தற்போது மேற்கொள்ளப்படும் வேலைகள் தாமதம் அடைவதேயாகும். இதற்கு மழை முக்கிய காரணமாகும்.

மழை காலத்திலே ஏன் வேலைகளைச் செய்கிறோம் என மக்கள் எண்ணக்கூடும். வருட இறுதிப் பகுதியிலேதான் எமக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வருட ஆரம்பத்திலே எமக்கான நிதி வந்து சேருவது தாமதமடையும். ஏப்பிரல், மே மாதங்களில்தான் எமக்கான நிதி கிடைக்கும்.

மழை காலத்தில் வேலைகள் மேற்கொள்வதால், சரியானமுறையில் திருத்தப்பணிகள் மேற்கொள்வதில்லையென மக்கள் குற்றம் சாட்டுகின்றார்கள். நாம் ஒருபோதும் மழை நேரத்தில் வீதிப்பராமரிப்புப் பணிகளைச் செய்ய அனுமதிப்பதில்லை. குறிப்பாக தார் ஊத்துவது மழை காலத்தில் செய்யமுடியாது. இதனை செய்வதற்கு நாம் அனுமதிப்பதில்லை.

வீதிகளிலுள்ள குழிகள் அடைக்கப்பட வேண்டியது அவசியமாகையால், மழையையும் பொருட்படுத்தாது அந்த வேலைகளை மேற்கொள்கின்றோம்.

வீதிகளை முழுமையாக புனரமைக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்த எணணம் தவறானது என நான் கூற வில்லை. ஆனால், முழுமையான திருத்தப் பணிகள் மேற்கொள்வதற்கு எமக்கு நிதி போதாது.

இதற்குரிய காரணம் என்னவெனில், கொழுமபு போன்ற பிரதேசங்களுக்கு ஒதுக்கப்படும் அளவு தொகையே எமக்கு ஒதுக்கப்படுகிறது. தென்னிலங்கை வீதிகளில் அநேகமானவை 'கார்ப்பன" வீதிகளாகும். அவற்றுக்கான திருத்தப் பணிகளுக்கான செலவுகள் மிகக்குறைவு. எனவே, அவற்றுக்கு ஒதுக்கப்படும் அளவு நிதியை வைத்துக்கொண்டு, நாம் எவ்வாறு பாரிய புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளமுடியும்.

மேலும், மக்கள் எம்மோடு பூரணமாக ஒத்துழைக்கவேண்டும். வீதிகள் அனைத்தும் அரசிற்கே சொந்தமானவை, மக்களுக்கல்ல. எனவே, அந்த வீதிகளிலுள்ள திருத்தங்களை மேற்கொள்ளவும் அரசுக்கு உரிமை உண்டு. வெள்ளம் தேங்கி நிற்கும்போது, கான் வெட்டி அதனை அகற்றுவதற்கு உரிமையுண்டு. இதனைச்சிலர் தடுக்க முயல்வது சட்டரீதியான குற்றமாகும்.

மற்றும் வீதிக்கரைகளில் தமது வீடுகளை அமைத்துள்ள மக்கள் - மதில்களை கட்டியுள்ளமையால், மழைநீர் வடிந்துசெல்ல முடியாதுள்ளது. அதனைவிட, தமது வாசல்களிலும் உயர்வாக சீமெந்துத் தரைகளைக் கட்டியுள்ளமையாலும், வெள்ளம் வடிந்து போகமுடியாது வீதிகளில் தேங்குகிறது. இந்த விடயத்திலே மக்களின் பூரண ஒத்துழைப்பு எமக்குத் தேவை. வீதியை பராமரிப்பது என்பது எமது வேலையாக இருந்தாலும், அதனைப் பாதுகாப்பது மக்கள் கடமையாகும்.

## மோசமான வீதிகள்

- காங்கேசன்துறை வீதி (ஒருவழிப் பாதையாக பாவிக்கப்படும் பகுதி)
- பலாலி வீதியின் இலுப்பையடிச் சந்திப்பகுதி. பிறவுண்வீதியில் கலட்டிச்சந்திக்கு அருகில் (பாரிய குழியொன்று காணப்படுகிறது. இதனுள் முழங்கால் அளவிற்கு வெள்ளம் தேங்கும். பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி என்பன இந்த வீதியிலேயே அமைந்துள்ளன)
- இலங்கை ரெலிகொம் பரிவர்த்தன நிலையத்திற்கு முன்பாக பண்ணைப் பகுதி நோக்கிய வீதி. கொட்டடிச்சந்திப்பகுதி (இந்தச் சந்தியின் நடுவே 10 அடி அகலமான குழியொன்று காணப்படுகிறது) நாவலர் வீதி (கஸ்தூரியார் வீதியில் ஆரம்பித்து, மானிப்பாய் வீதியில் முடிவடையும் பகுதி)
- அத்தியடிப் புதுவீதி.

**அச்சுக்கு வராத வீதிகள் இன்னும் ஆயிரமாயிரம்**

## இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையேயான போர்நிறுத்தம் குறித்த கூட்டம் தோல்வியில் முடிவடைந்தது!



இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையே போர்நிறுத்தம் ஒன்றை கொண்டுவருவதற்கு பலஸ்தீனக் குழுக்களால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டம் தோல்வியில் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய பிரதேசங்களில் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொள்வதில் பலஸ்தீனக் குழுக்களிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேற்றுமைகளே இந்தத் தோல்விக்குக் காரணமாக அமைந்ததாக கூட்டத்தை ஒழுங்குசெய்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தோல்வி, பலஸ்தீன பிரதமர் அகமட் கூரேக்கு தனிப்பட்ட முறையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக பி.பி.சியின் போல் வூல் தெரிவித்தார்.

பலஸ்தீனப் பிரதமர் கூரேயும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. மேலும் பலஸ்தீன தீவிரவாதக் குழுவினர் சிறிது காலத்திற்கு போர்நிறுத்தமொன்றுக்கு உடன்படுவதற்கும் மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

இதனிடையே இஸ்ரேலிய உதவிப் பிரதமர் ஏகூட் ஒல்மேற், நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும்போது தாக்குதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு பலஸ்தீனியர்களிடம் எதுவித முன்னேற்றமும் தென்படவில்லை எனத் தெரிவித்திருந்தார். மேலும் தாக்குதல் நிறுத்தப்படும்வரை சமரச முயற்சிக்கான சாததியங்கள் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.



புறூண்டியில் போராளிக் குழுக்களின் தலைவர் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்காக தனது மறைவிடத்திலிருந்து வெளியேறியுள்ளார். கூடவே அதன் உறுப்பினர்கள் சுதந்திரமாக உலா வருவதை படத்தில் காணலாம்.

## அமெரிக்கப் படையினரின் தாக்குதலில் 9ஆப்கான் சிறுவர்கள் பரிதாப மரணம்!

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் கடந்த சனிக்கிழமை அமெரிக்க விமானப் படையினர் நடத்திய குண்டுத் தாக்குதல் ஒன்றின்போது தவறுதலாக ஆப்கானிஸ்தானிய சிறுவர்கள் 9 பேர் கொல்லப்பட்டனர் என அமெரிக்கப் படையதிகாரி கிறித்தோப்பர் வெஸ்ட் தெரிவித்தார்.

கான்சி நகரில் வீடொன்றில் தீவிரவாதிகள் மறைந்துள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் தீவிரவாதிகளுடன் சிறுவர்களும் கொல்லப்பட்டதாக தரைப்படையினர் தெரிவித்திருந்தனர்.

இந்தத் தாக்குதலால் அந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களிடையே அமெரிக்கப் படையினர் மீது மிகுந்த வெறுப்பேற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கப் படையினரால் அண்மைக் காலத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் தாக்குதலினால் ஆப்கானிஸ்தானிய பொதுமக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இதனால் வெளிநாட்டுப் படையினர் மீது கணிசமான தொகை மக்களிடையே வெறுப்பு உணர்வு அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தாய்வானை சுதந்திர நாடாக மாற்றும் கருத்துக் கணிப்பு மசோதாவில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளது!

(தாய்பேய்)

தாய்வானை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்துவதற்கு மக்கள் கருத்துக் கணிப்புக்கான மசோதா ஒன்றை அந்த நாடு நாடாளுமன்றத்தில் அண்மையில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றிருந்தது.

ஆனால், அதில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என எதிர்க்கட்சிகள் தெரிவித்ததால் - இது தொடர்பான மாற்றங்கள் புதன்கிழமை அறிவிக்கப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் பெற்ற மசோதாவின் மூலம் கருத்துக் கணிப்பொன்றை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் எதிர்க்கட்சியினர் மக்களுக்கும் சட்ட அறிஞர்களுக்கும் நாடாளுமன்றத்தில் கருத்துக் கணிப்புக்கான மசோதாவை முன்வைப்பதற்கும் அந்நிய நாடொன்று தாக்க முற்படும்போதே அரசுக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமெனவும் கருத்துத் தெரிவித்தனர்.

இதனிடையே தாய்வான் தனது நாட்டின் ஒரு பகுதி என சீனா கருத்துத் தெரிவித்துவருவது குறிப்பிடத்தக்கது.

## சவூதியில் தாக்குதல் போராளி ஒருவர் பலி

சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய போராளி ஒருவர் மீது படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அவர் உயிரிழந்தார்.

இப்ராஹிம் - அல் ரஜீஷ் என அழைக்கப்படும் இந்தப் போராளி தேடப்பட்டுவரும் 26 முஸ்லிம் போராளிகளில் முக்கியமானவர் என சவூதி உள்நாட்டமைச்சர் தெரிவித்தார்.

## ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தலில் புட்டினின் கட்சி முன்னணியில்!

ரஷ்யாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி புட்டினின் ஐக்கிய ரஷ்யாவுக்கான கட்சி 37 வீதமான வாக்குகளைப் பெற்று முன்னணியில் உள்ளது. இதன்மூலம் ஜனாதிபதி புட்டினின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வெற்றி ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான வெற்றியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றி மூலம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அதிபர் புட்டின் மீண்டும் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ரஷ்ய ரயிலில் பலியானவர்களின் மரணச் சடங்குகள் நடைபெற்றன!

(மொஸ்கோ)

ரஷ்யாவின் தென்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை ரயில் ஒன்றின்மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்காக, தாக்குதல் நடைபெற்ற இடமான "கிக்ஸ் லோவொட்ஸ்" இல் மரணச் சடங்குகள் நடத்தப்பட்டன.

இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள தொலைக்காட்சி, வானொலி நிலையங்கள் யாவும் தமது நாளாந்த நிகழ்ச்சிகளை நிறுத்தியிருந்தன.

உயிரிழந்தவர்களில் அநேகமானவர்கள் மாணவர்களாவர். சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றுக்கு மாணவர்கள் சென்றுகொண்டிருந்த வேளையிலேயே இந்தத் தாக்குதல் நடைபெற்றிருந்தது.

தற்கொலைக்குண்டுத் தாக்குதல்களைத் தடுப்பதில் ரஷ்யா அதிக கவனம் செலுத்தவில்லை என, பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

## பனிக்கட்டியால் சூழ்ந்துள்ள அமெரிக்க வடகிழக்குப் பகுதி!



(வோஷிங்ரன்)

அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதி பனிக்கட்டியால் சூழ்ந்துள்ளதாகவும் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் பாதை அருகில் பனிக்கட்டிகளை அகற்றிக்கொண்டிருந்த ஒருவர் கடுங்குளிர் காரணமாக உயிரிழந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொஸ்டன் நகர் பகுதியில் 25 அங்குலம்வரை பனிக்கட்டிகள் உயர்ந்துள்ளதாகவும் பனிப்புயல் மணிக்கு 45 மைல் வேகத்தில் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இருவேறு தாக்குதல்களில் ஈராக்கில் இருவர் உயிரிழப்பு!

ஈராக்கில் இடம்பெற்ற இருவேறு தாக்குதல் சம்பவங்களில் இருவர் உயிரிழந்தனர்.

தலைநகர் பக்தாத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் ஒன்றில் வெடிகுண்டுகளை அகற்றும் பணியில் அனுபவம் பெற்றிருந்த ஈராக்கியப் பொலிஸார் ஒருவர் உயிரிழந்தார்.

ஈராக்கின் வடபகுதி நகரான மொசுலில் இடம்பெற்ற மற்றொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் அமெரிக்கப் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

அமெரிக்க கூட்டுப் படையினருடன் இணைந்து செயற்படும் பொலிஸார், சதாம் ஆதரவாளர்களால் கொல்லப்படுவது ஈராக்கில் அதிகரித்து வருகிறது.

இதனிடையே, மின் இணைப்புக்களை வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த தென்கொரியாவைச் சேர்ந்த நாற்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடந்த இரண்டு நாட்களில் ஈராக்கிலிருந்து வெளியேறியுள்ளனர்.

தென்கொரியாவைச் சேர்ந்த இரு பொறியியலாளர்கள் அண்மையில் ஈராக்கில் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## உலக நோக்கு

## பொதுநலவாய அமைப்பிலிருந்து நிரந்தரமாக சிம்பாப்வே விலகல்!

பொதுநலவாய அமைப்பிலிருந்து நிரந்தரமாக விலகிக் கொள்வதாக சிம்பாப்வே ஜனாதிபதி றொபெட் முகாபே தெரிவித்தார்.

கடந்த ஆண்டு சிம்பாப்வேயில் நடைபெற்ற தேர்தலில் ஒழுங்கீனங்கள் காணப்பட்டதாகத் தெரிவித்து, பொதுநலவாய அமைப்பில் இருந்து சிம்பாப்வே விலக்கப்பட்டிருந்தது.

முகாபேயினால் திடீரென எடுக்கப்பட்ட தீர்மானத்தினால் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளதாக, பொதுநலவாய அமைப்பின் பேச்சாளர் யோயேஸ் திபாசோ தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகளின் அதிகாரிகளும், பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளின் தலைவர்களும் அந்த அமைப்பின் ஒற்றுமைக்காக அதிகம் உழைக்க வேண்டி நேரிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தேசிய அரசு அமைக்கும் முயற்சிகளுக்கு மலையகத் தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்குமானால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க 42 மலையகத் தொழிற் சங்கங்களும், அமைப்புக்களும் அணிதிரண்டுள்ளன.

மலையகத்தின் நிலைமைகள் குறித்து ஆராயும்முகமாக அப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கூட்டத்தில் 42 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தை தொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியன இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் தேசிய அரசாங்கத்தை அமைத்தால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க - 42 தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய புதிய அமைப்பொன்று இதன்போது உருவாக்கப்பட்டது.

மலையகத்திலுள்ள இந்திய வம்சாவளித் தமிழ்மக்களின் உரிமைகளில் அக்கறைகொண்டுள்ள ஏனைய எல்லா வெகுஜன ஸ்தாபனங்களையும், புத்திஜீவிகளையும் ஒரு குடையின் கீழ் அணிதிரட்டுவது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

## நாற்சந்தி

'ஆர் ஆருக்கு சவால் விடுறதென்று ஒரு தகுதியில்லாமல் போட்டுது'

'என்ன மணியம் கோபமாய் இருக்கிறாய் போலை கிடக்கு.....'

'பின்ன கோவம் வராதே.... சும்மா கொழுவ வேண்டுமென்று நினைச்சுக்கொண்டல்லே சவால் விடுகினம்'

'என்ன மணியம் நீயே உனக்குள்ள பெரிசா சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் கோவத்தில புலம்பிக்கொண்டிருக்கிறாய்.....'

'புலம்புறனோ..... கேந்தியைக் கிளப்பாதை கனகு...., ஆரும் சும்மா இருக்கிற.... உன்ரை வேலையுண்டு நீயுண்டு என்றிருக்கிற உன்னை வலியக் கொழுவலுக்கு கூப்பிட்டால் கோபம் வராதே?

'அது சரி.... என்ன விசயமெண்டு சொல்லன்.....'

'அப்பிடிக்கேள்..... எங்கட சம்பந்தரை விவாதத்துக்கு வரச்சொல்லியல்லே சிஹல உறுமய தாடிக்கார திலக் கருணாரத்ன கேட்டிருக்கிறார்....'

'எங்கேயாம் பட்டிமன்றம் நடக்கப்போகுது.....? என்ன தலைப்பு.....?'

'உனக்கு எப்பவும் பட்டிமன்றத்துக்குப் போய் வாய்பிளந்து பார்க்கிற எண்ணம்தான்..... இது வேற விவாதம்..... அரசியல் விவாதம்.....'

'ஓஹோ..... பேரினவாதம் இப்பவிவாதத்தில வந்து நிற்குதே....'

'கூட்டணியின்ர கொள்கைகள் வடக்கு - கிழக்கில் சிங்கள மக்களின்ர உரிமையைப் புறக்கணிக்குதாம்..... இதனைப் பற்றித்தான் விவாதிக்க வரட்டாம்.....'

'ஏன் ஏனைய மாகாணங்களில் பேரினவாதம் பிடிச்ச வகுப்புவாதிகளின் கொள்கைகள் தமிழ்மக்களின் உரிமைகளை நிராகரிக்கிறது என்பது பற்றி விவாதத்துக்கு வருமாறு சம்பந்தன் கேட்கிறதுதானே....!

'சீ..... நீ ஒன்று அவர், சிங்கள மக்களிட்டையே செல்வாக்கு இல்லாத தகுதியற்ற சிஹல உறுமயவுடன் விவாதம் புரிவதில் அர்த்தமில்லை என்று ஒரே போடாய் போட்டிட்டார்.'

'அப்ப அதோடையே விவாதம் முடிந்தது.... அவ்வளவு தானே'

-தெருவாசி

## பிக்கப் மரத்துடன் மோதியதால் நாடாளுமன்ற உறுப்பினர் காயம்!

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிட்னி ஜெயரத்ன சென்ற பஜிரோ வாகனம் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் - அவர் படுகாயமடைந்ததோடு, அவருடன் கூடச் சென்ற பெண் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடைபெற்றது

படுகாயமடைந்த ஜெயரத்ன தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சம்பவ இடத்தில் உயிரிழந்த பெண் மெதிரிகிரியவைச் சேர்ந்த அசிரிகுசும் மங்கலிக எனவும், இவர் குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் முன்னாள் அலுவலகப் பணியாளர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## நிரந்தர வதிவிட...

நாட்டின் உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து தெரிவிக்கப்படுவதாவது,

கனடாவின் நிரந்தர வதிவாளர் அந்த நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கான சகல ஆவணமும் கொண்டிருததல்வேண்டும். அவற்றுள் மிக முக்கியமானதாக அவர் நிரந்தர வதிவாளர் அட்டையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அவ்வாறு நிரந்தர வதிவாளர் அட்டை இல்லாமல் தற்போது இலங்கையில் தங்கியுள்ளவர்கள் WWW. Cic.gc.ca எனும் இணையத்தளத்தினூடாக தொடர்புகொள்ளமுடியுமெனவும், அல்லாவிடின் கொழும்பிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயத்துடன் தொடர்புகொண்டு உரிய பணத்தைச் செலுத்தி பதிவினை மேற்கொள்ளமுடியும் எனவும் கனேடிய உயர்ஸ்தானிகர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்கத்தின் பொறுப்பு...

பட்டது. இப்போது சிக்கல் ஏற்பட்டுள்ளதற்கு அமைச்சுக்களின் பொறுப்புக்கள் பறிக்கப்பட்டமையே காரணம்.

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமையால் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் சமாதானப் பேச்சுக்கள் குறித்து ஓர் தெளிவற்றநிலை தோன்றியுள்ளது.

அரசாங்கத்தின் பொறுப்பு முழுவதும் எம்மிடம் உள்ளது. எனினும் ஜனாதிபதியின் நடவடிக்கையால் புலிகளுடனான பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்கு என்னிடம் அதிகாரம் இல்லை. இதனை நோர்வே அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அறியத்தருகின்றேன். எனவே இலங்கை சார்பில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச்செல்வதற்கு யாரும் இல்லை. இது ஒரு பிரச்சினையாகும் எனத் தெரிவித்தார்.

## கல்வியியற் கல்லூரிகளில் நேர்முகப் பரீட்சை இன்று!

நாட்டில் உள்ள 17 தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அடுத்த கல்வியாண்டுக்கான மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய நேர்முகப்பரீட்சைகள் இன்றும், நாளையும் நாடளாவியரீதியில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு அட்டாளைச்சேனை, சிறிபாத, தர்க்காநகர் கல்வியியல் கல்லூரிகளும் இதற்குள் அடங்கும்.

இம்முறை 60 ஆயிரம்பேர் தேசிய கல்வியியற் கல்லூரிக்காக விண்ணப்பித்துள்ளார்கள். அவர்களில் 14 ஆயிரம்பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். மூவாயிரம் பேர் தெரிவுசெய்யப்பட இருப்பதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## சமாதான...

தற்போது தேக்கமடைந்திருக்கும் அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் அதேவேளை- அரசியற்தலைவர்கள் தமக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்வார்கள் என்று நம்புவதாகவும் இராணுவத்தளபதி பலகல்ல தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதிக்கும் - பிரதமருக்கும் இடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்பட்டதும், சமாதான முயற்சிகள் மிகவிரைவாக வேகம் பெறுமென நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல நேற்று இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லையிலுள்ள கட்டுப்பாட்டுக் கோட்டுப்பகுதியில் இருக்கும் இந்திய இராணுவ நிலைகளுக்கு விஜயம் செய்தார். அத்துடன், உள்ளூர் இராணுவ அதிகாரிகளுடனும் அவர் பேச்சுக்களை நடத்தினார்.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவுடன், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இயக்குநர் பிரிகேடியர் கபில ஹெந்தவிதாரணி, பயிற்சி இயக்குநர் சிறிநாத் ராஜபக்ஷவும் இந்தியாவுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கீரிமலை செல்ல...

நேற்று பலாலி வீதியினூடாக இராணுத்தினர் மற்றும் பொலிஸாரின் போக்குவரத்தினை அமைச்சர் மகேஸ்வரனும் அவரோடு இணைந்த கூட்டத்தினரும் தடைசெய்தனர்.

காலை ஆறு மணியில் இருந்து நண்பகல் பன்னிரண்டு மணிவரை இந்த மறியற்போராட்டம் நடைபெற்றது. பொதுமக்களின் வாகனங்களையும் தனியார் மற்றும் அரச போக்குவரத்து சேவை பஸ்களையும் செல்ல அனுமதித்த அமைச்சர் மகேஸ்வரனின் குழுவினர் இராணுவ வாகனங்கள் எதனையும் செல்ல அனுமதிக்கவில்லை.

இதன் காரணமாக இராணுவ வாகனங்கள் பலாலி வீதியினூடாக தமது போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது பழம்வீதியினூடாக மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலாலி வீதியிலுள்ள அமைச்சர் மகேஸ்வரனின் வீட்டிற்கு முன்னாலேயே இந்த மறியற்போராட்டம் இடம்பெற்றது. இங்கு வருகைதந்த போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் - 512 வது படையினர் இராணுவ அதிகாரி உடவத்த டி சில்வா மற்றும் யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹெட்டி தர்மஆராச்சி ஆகியோர் இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் மகேஸ்வரனோடு கலந்துரையாடினர்.

இவர்கள் அனைவரதும் வேண்டுகோளுக்கிணங்க நண்பகல் 12 மணியுடன் தமது போராட்டத்தினை இடைநிறுத்திக்கொள்வதாக அமைச்சர் மகேஸ்வரன் அறிவித்தார்.

அதேவேளை சம்பவ இடத்திலே நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பொல்லுகள், தடிகள் என்பனவற்றுடன் குவிக்கப்பட்டிருந்தனர் மறியற்போராட்டம் முடிவடையும் முன் பலாலி வீதியூடாக செல்லமுயன்ற படையினரும் அமைச்சரின் குழுவினருக்கும் இடையில் சிறு கைகலப்பு ஒன்று இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்க்...

தலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் தென்னிலங்கையில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிநிலை மற்றும் கூட்டமைப்பின் செயற்பாடு குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமிழ்ச்செல்வனுடன் ஆராய இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## குடாநாட்டில் கெடுபிடிகளை நீக்கி சுமுகநிலையை ஏற்படுத்துங்கள்!

### புதிய படைத் தளபதியிடம் எழிலன் வேண்டுகோள்

(வவுனியா)

கடந்த காலங்களில் யாழ். குடாநாட்டில் இராணுவத்தினர் தமிழ்மக்கள் மீது மேற்கொண்டுவரும் கெடுபிடிகளை நீக்கி, சுமுகநிலையை ஏற்படுத்துமாறு - வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் குடாநாட்டின் புதிய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா இடமாற்றம் பெற்றுள்ளதையடுத்து, புதிதாக வன்னிமாவட்டக் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நியமிக்கப்பட்டார்.

இவர் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறை அலுவலகத்துக்கு சென்று பிரியாவிடை பெற்றார்.

இதன்போது, அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் நினைவுப் பரிசொன்றினையும் சந்திரபாலவிடம் வழங்கினார்.

இதன்போது தென்பகுதியில் வாழும் மக்கள் அனுபவிக்கின்ற வசதிகள் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ்மக்களும் அனுபவிக்கவேண்டும். இதுவே நியாயமான தீர்வாகுமென எழிலன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள படையினர் ஏ-9 வீதியூடாக கொழும்புக்கு திரும்பக்கூடிய சூழலை இனிவரும் காலங்களில் உருவாக்கப்போவதாக சந்திரபால தனது பிரியாவிடை வைபவத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

## எமது வீதிகளில் படையினரை...

நடைபெற்றுள்ளன. தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு சென்ற தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இதேபோன்றதொரு அனுபவம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்திற்கும் ஏற்பட்டது. இன்று எனக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் எஞ்சியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த நிலை தோன்றாது என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது.

இச்சம்பவத்தை கண்டித்து ஜனாதிபதிக்கோ அல்லது வேறு முக்கிய நபர்களுக்கோ கடிதங்களை அனுப்ப நான் விரும்பவில்லை. கடந்த ஐம்பது வருட காலமாக இந்த நிலைதான் தொடர்கிறது. ஆனால், எவ்வித தீர்வுகளும் எட்டப்படவில்லை. இதனாலேயே நேரடியாக நானே மறியற் போராட்டத்தில் ஈடுபட்டேன்.

இப் போராட்டம் தொடருமா என செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் மகேஸ்வரன், படையினர் இன்று தமது இஷ்டப்படி தாம் நினைத்தபோது எம்மை வழிமறிக்கிறார்கள். எனவே நாமும் எமக்கு வசதியான நேரங்களில் எல்லாம் இராணுவத்தினரை மறிப்போம்.

விடுதலைப்புலிகளுடைய கைகளும் இன்று கட்டிப்போடப்பட்டுள்ளது. இந்த யுத்தநிறுத்தம் ஏற்படாது இருந்தால் அவர்கள் எப்போதோ குடாநாட்டை மீட்டு எமது மக்களை பாதுகாப்பு வலயங்களிலும் குடியேற வழிசெய்திருப்பார்கள். ஆனையிறவிலும், முல்லைத்தீவிலும் நடந்தது இதுதான்.

இன்று அவர்களும் எதுவும் செய்யமுடியாதுள்ளார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஊர்காவற்றுறை....

புதுக்கோட்டையிலிருந்து மூன்று மீன்பிடிப் படகுகளில் வந்திருந்த மீனவர்கள் 11 பேரும் ஊர்காவற்துறை கடற்பரப்பை அண்டிய பகுதியில் கடற்தொழிலில் ஈடுபட்டனர்.

இதன்போது ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர் இவர்களை கைதுசெய்ததுடன் இவர்களுடைய மீன்பிடிப்படகுகளும் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

## கொழும்பு...

பித்து இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்ததாக திலங்க சுமதிபாலாவின்மீது குற்றம்சுமத்தப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே கொழும்பு நீதிமன்றம்-குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சரணடையுமாறு திலங்க சுமதிபாலாவிற்கு உத்தரவு பிறப்பித்திருந்தது. எனினும், அவர் அதனை ஏற்றுக்கொள்ளாமல் உயர்நீதிமன்றத்தில் தன்னைக் கைதுசெய்வதற்கு எதிராக தடையுத்தரவைக்கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார்.

ஆனால், நீதிவான் நீதிமன்றில் இது தொடர்பான மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளபோது, அதற்கெதிராக உயர்நீதிமன்றத்தால் செயற்படமுடியாதென உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

இந்நிலையில் நேற்று நீதிவானிடம் சரணடைந்த திலங்க சுமதிபாலாவை நிபந்தனைகளுடன் வீடு செல்ல நீதிவான் அனுமதித்தார்.

அத்துடன் விசாரணைகளுக்கு சமுகமளிக்காதபட்சத்தில் குற்றப் புலனாய்வுப்பிரிவினர் இவரை கைதுசெய்யலாமெனவும் நீதிபதி அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார். (01)

## பல்கலை...

(வயது-24) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, கொழும்புத்துறை செபமாலை அன்னை கோயிலுக்கு அருகில் குளத்தில் இளைஞர்கள் சிலருடன் குளித்துக்கொண்டிருந்த வேளை குளத்தின் மறுகரையை நோக்கி நீந்திச்சென்றுள்ளார். நீண்ட தூரம் நீந்தியதால் களைப்படைந்த இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

கரையில் குளித்துக்கொண்டிருந்த இளைஞர்களுக்கு நீந்தத் தெரியாததால் - உடனடியாக அவரை காப்பாற்றமுடியாமல்போனதாகவும் வேறுசிலரை கூட்டிவந்து காப்பாற்ற முயற்சித்தபோது, அவர் உயிரிழந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட அவரது சடலம் மரண விசாரணைகளின் பின்னர் உறவினரிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு நேரில் சென்ற யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்கினராஜா குளத்தைப் பார்வையிட்டதுடன் சாட்சிகளைப் பதிவுசெய்யும்படி பொலிஸாருக்கு உத்தரவுபிறப்பித்தார். (ச)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.